**தலைப்பு 220 – ஆயுர்வேத திணைக்களம் - 2023**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 220 – ஆயுர்வேத திணைக்களத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் ஆயுர்வேத திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காட்டப்பட்டுள்ளது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இவ்வறிக்கையின் 1.6 பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான ஆயுர்வேத திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 பந்தியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியாக நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன், அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தன்மையை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றை பெற்றுக் கொள்ளும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம், பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட கீழே காட்டப்பட்டுள்ள பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| 2022 ஆண்டின் தலைப்பு - 220 இற்குரிய 154(6) அறிக்கையின் பந்திகளுடன் தொடர்பு | செயற்படுத்தப்பட்டிருக்காத பரிந்துரைகள் | இந்த அறிக்கையின் பந்திகளுடன் தொடர்பு |
|---|---|---|
| 1.6.1(அ) | சட்டரீதியாக திணைக்களத்திற்கு உரிமையை உரித்தாக்கியிருக்காத காணிகளின் உரிமையை உரித்தாக்குவதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்து கணக்குகளில் உரிய சீராக்கல்கள் மேற்கொள்ள வேண்டும். | 1.6.1(இ)(i) |
| 1.6.1 (இ) | கணக்குகளில் ஆரம்ப மீதிகளுக்கு மேற்கொள்ளப்பட்டிருந்த வழமையல்லாத சீராக்கல்கள் தொடர்பாக விரிவான தகவல்கள் குறிப்புக்கள் மூலம் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 1.6.1(இ)(ii) |
| 1.6.1(ஆ) | திணைக்களத்திற்கு சொந்தமான அனைத்துச் சொத்துக்களும் கொம்ட்ரோலர் ஜனராலிற்கு அறிவிக்கப்பட்டு சரியாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | 1.6.1(இ)(iii) |

| | | |
|---|---|---|
| 1.6.1(உ) | நிதியல்லாத சொத்துக்களை கணக்கீடு செய்யும் போது சரியாக வகைப்படுத்தல் மேற்கொள்ள வேண்டும். தனதாக்கிய நிலையான சொத்துக்களுக்குரிய நிதியாண்டின் நிதியல்லாத சொத்துக்களின் கீழ் அறிவிக்கப்படுவது என்பதை பொறுப்பாக இருக்க வேண்டும். | 1.6.1(இ)(vi) |
| 1.6.1(ஊ) | தொழிற்பாட்டு குத்தகை காலப் பகுதியின் பின்னர் திணைக்களத்திற்கு உரித்தாக்கப்பட்டிருந்த வாகனங்கள் நிதி அல்லாத சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 1.6.1(இ)(viii) |
| 1.6.1(எ) | வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புக்களின் கிரயத்தை மூலதனப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | 1.6.1(இ)(ix) |
| 1.6.4(ஆ) | நிதிப் பிரமாணங்கள் 891(1) குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் அடங்கக்கூடியவாறு பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர் தொடர்பாக பிணைப் பதிவேடு நாளதுவரை ஆக்கப்பட்டு பேணிச் செல்ல வேண்டும். | 1.6.1(ஈ)(i) |
| 2.3(அ) | ஐங்கரும மற்றும் மஸாஜ் நிலையங்களில் ஒழுங்குறுத்தலுக்கான முறையான சட்ட சட்டகமொன்று ஏற்படுத்துவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2.6(அ) |
| 2.3(இ) | 2019 ஏப்ரல் 16 திகதிய 09/2009 இலக்கம் கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்க விரல் அடையாள இயந்திரத்தின் மூலம் உறுதிப்படுத்தப்படாத காலப் பகுதிகளுக்காக மேலதிக நேரம் மற்றும் விடுமுறை நாள் சம்பளம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கக் கூடாது. | 2.6(ஊ) |
| 2.1 | தாபனக் கோவை, தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கை மற்றும் அரச நிதிச் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க ஊழியர் கடனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் போதிலும் அவ்வாறு செயற்படும் பொறுப்புக்களை நிறைவேற்றாத உத்தியோகத்தர்களிடம் மிகை விதிப்பு செய்வதற்காக நிதிப் பிரமாணம் 104(2)''ஆ'' இணங்க செயற்பட வேண்டும். | 2.4 |
| 3.5 | அரசாங்கப் பணம் சிக்கனத்துடன் பயன்படுத்தி தேவைப்பாடு மற்றும் முக்கிய குறிக்கோல்களை நிறைவேற்றிக்கொள்வதற்காக மாத்திரம் செயற்திட்ட பிரேரணைகள் செயற்படுத்த வேண்டியதுடன், பெறுகை வழிகாட்டல்கள் சரியாக கடைபிடிக்கப்பட்டதெனவும் மற்றும் | 3.5 |

| | | |
|---|---|---|
| | வெளிப்படைத் தன்மையுடன் செயற்பட்டதென உறுதிப்படுத்துவதற்காக எழுத்துமூல சான்றுகள் பேணப்பட்டு பெறுகைகள் நடாத்திச் செல்ல வேண்டும். | |
| 3.7(ஆ) | திணைக்களத்தினால் செலுத்தப்பட்ட சம்பளத்திலிருந்து நிலுவைத் தொகை உடனடியாக அறவீடு செய்வதற்காக சட்டரீதியாக நடவடிக்கை எடுப்பதற்கு அல்லது நிதிப் பிரமாணம் 104(2)''ஆ'' இற்கு இணங்க பொறுப்பான உத்தியோகத்தர்களிடம் மிகை விதிப்பு மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், ஆளணிக் கட்டுப்பாடு மற்றும் சம்பளக் கட்டுப்பாடு பிரிவுகளிடையே நாளதுவரையான தொடர்ச்சியான இணைப்பினை உறுதிப்படுத்தும் கட்டுப்பாட்டு முறைகள் அறிமுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 3.7(ஆ) |
| 3.8(அ) | மூலிகைத் தோட்ட நிருவாகம் முறைப்படுத்த வேண்டியதுடன், அந்த மூலிகை தோட்டங்களிலிருந்து கிடைக்கக் கூடிய விளைச்சல்கள் ஆயர்வேத வைத்தியசாலைகளின் மருந்து வகைகள் உற்பத்திக்காக பயன்படுத்துவதற்கு மற்றும் அது தொடர்பாக போதியளவு அறிக்கைகள் பேணிச் செல்வதற்காக முறையான உள்ளகக் கட்டுப்பாட்டு முறை நிறுவப்பட வேண்டும். | 3.8(ஆ) |
| 3.8(உ) | தேவைப்பாட்டினை சரியாக இனங் காணாமல் மற்றும் முறையான சாத்தியக்கூறு ஆய்வொன்று இன்றி கொள்வனவு செய்திருந்த அனைத்து இயந்திரங்களும் பயன்தரக்கூடிய வகையில் பயன்படுத்துவதற்கு அல்லது ஆயுர்வேத வைத்தியசாலைகளில் அல்லது ஆயுர்வேத கூட்டுத் தாபனத்தின் மருந்து உற்பத்திக்கு பயன்படுத்துவதற்காக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன், இந்த ஒழுங்கீனங்களுக்கு பங்களிப்பு செய்த அனைத்து உத்தியோகத்தர்கள் தொடர்பாகவும் தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். | 3.2(ஆ) |
| 5(அ) | திணைக்களத்தில் பிரதான அலுவலக வளாகம், வைத்தியசாலைகள், மூலிகைத் தோட்டங்கள், சமூக சுகாதார பிரதேச அலுவலகங்கள் ஆகிய அனைத்து பிரிவுகளிலும் அலுவல்களையும் தொடர்புபடுத்தக்கூடிய முகாமைத்துவ தரவு முறைமை ஒன்று நிறுவப்பட வேண்டும். | 3.2(இ) |
| 5(இ) | ஆயுர்வேத ஆய்வு வைத்தியசாலைகள் நிறுவப்படுவதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட செயலாற்றுகையினை நெருங்குவதற்கு பொறுத்தமான வகையில் பதவியணியினரை மறுசீரமைப்பு மேற்கொள்ளப்பட வேண்டும். | 5(இ) |

## 1.6 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

#### (அ) மூலதனச் செலவுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்றில் மூலதன மாற்றங்கள் ரூபா 831,802 தொகை மற்றும் ஏனைய மூலதனச் செலவுகள் ரூபா 3,027,423 தொகை என காட்டப்பட்டிருந்த போதிலும், ஏஸீஏ2(ii) படிவத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டத்தின் படி செலவுக் கூற்றில் மூலதன மாற்றம் ரூபா 831,802 தொகை காட்டப்பட்டிருக்கவில்லை. அதன்படி, நிதிச் செயலாற்றல் கூற்றில் மூலதன மாற்றங்கள் ரூபா 831,802 தொகை மிகையாகவும், ஏனைய மூலதனச் செலவுகள் அந்த எண்ணிக்கையால் குறைவாகவும் காட்டப்பட்டிருந்தது. | ஒப்பீட்டு ரீதியான தரவுகளை அடிப்படையாகக் கொண்டு நிதிக்கூற்றுக்களில் இந்தத் தகவல்கள் காட்டப்பட்டுள்ளதுடன், ஏஸீஏ2(ii) படிவத்தில் தவறுதலாக அந்த குறிப்பு இலக்கங்கள் தொடர்பாக தரவுகள் உள்ளீடு செய்யும் போது மூலதன மாற்றங்களுக்கான பகுதி அகற்றப்பட்டுள்ளது என. அதன்படி, மூலதன மாற்றங்கள் மற்றும் ஏனைய மூலதனச் செலவுகள் சரியான வகைப்படுத்தலின் கீழ் அடுத்த வருடம் முதல் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதிக்கூற்றுக்களில் ஏஸீஏ2(ii) படிவத்தில் மூலதன மாற்றங்கள் மற்றும் ஏனைய மூலதனச் செலவுகள் சரியான வகைப்படுத்தலின் கீழ் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

#### (ஆ) கட்டுநிதி இணக்கக்கூற்றின் மீதி

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஏனைய தலைப்புக்களில் இருந்து முற்பண ''பீ'' கணக்கிற்கு மேற்கொள்ளப்படுகின்ற வரவு வைத்தல்களின் கூட்டுத்தொகை திறைச்சேரி அச்சுப் பதிவு (SA-51) இன் படி ரூபா 306,232 தொகையாக காணப்பட்ட போதிலும், கட்டுநிதி இணக்கக்கூற்று (படிவம் ஏ.சீ.ஏ - 7) படி ரூபா 2,623,773 தொகை என ரூபா 2,317,541 தொகை மிகையாக காட்டப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குவது எனவும், சரியான வகைப்படுத்தலின் கீழ் அடுத்த வருடம் முதல் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | கட்டுநிதி இணக்கக்கூற்றில் சரியான வகைப்படுத்தலின் கீழ் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**(இ) நிதி அல்லாத சொத்துக்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டு இறுதியளவில் சட்டரீதியாக திணைக்களத்திற்கு உரிமையை உரித்தாக்கியிருக்காத 12 காணிகளின் பெறுமதியாகிய ரூபா 2,318,020,000 தொகை நிதிக் கூற்றுக்களில் நிதி அல்லாத சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்ததுடன், சட்டரீதியாக திணைக்களத்திற்கு உரிமையை உரித்தாக்கப்பட்டிருந்த 07 காணிகளின் பெறுமதியை இனங்கண்டு கணக்கீடு செய்திருக்கவில்லை. | திணைக்களத்திற்கு சொந்தமான காணிகளை தீர்த்த பின்னர் அவ்வவ் காணிகளின் பெறுமதி மற்றும் சரியான தரவுகள் கணக்குகளின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்றது என. சுகாதார அமைச்சுச் செயலாளரின் அறிவுரையின் படி தற்போது அனைத்துப் பிரிவுகளுக்கும் தமது காணி மற்றும் கட்டிடங்களை விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தினூடாக பெறுமதி மதிப்பீடு செய்து அறிவிக்கும் படி அறிவிக்கப்பட்டுள்ளது என மற்றும் அம்பாறை சிரிமாவோ பண்டாரனாயக ஞாபகர்த்த ஆயுர்வேத ஆய்வு வைத்தியசாலை அமைந்துள்ள காணி மற்றும் அங்குள்ள கட்டிடங்கள் ரூபா 137.1 மில்லியனிற்கு பெறுமதி மதிப்பீடு செய்து 2024 ஏப்ரல் மாதம் கணக்குப் பொழிப்பின் மூலம் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது என. | காணிகளின் உரிமையை உரித்தாக்குவதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்து கணக்குகளுக்கு உரிய சீராக்கல் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், உரித்தாக்கப்பட்ட காணிகளை கணக்குகளில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | ஸிகாஸ் கணினி அச்சுப் பதிவின் பிரகாரம் ஏனைய இயந்திரங்கள் மற்றும் உபகரண செலவு விடயத்தின் கீழ் மீளாய்வாண்டின் போது ஆரம்ப மீதிகளுக்கு ரூபா 20,996,825 தொகை சீராக்கல் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அதற்குரிய விரிவான தகவல்கள் தயாரிக்கப்பட்டு கணக்குப் பதிவுகளின் மூலம் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஆரம்ப மீதிகளுக்கு மேற்கொள்ளப்பட்ட சீராக்கல்கள் முன்வரும் நிதிக் கூற்றுக்களில் பதிவு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என. | கணக்குகளில் மேற்கொள்ளப்படுகின்ற வழமையல்லாத சீராக்கல்கள் தொடர்பாக விரிவான தகவல்கள் குறிப்புக்கள் மூலம் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கொம்ட்ரோலர் ஜெனராலிற்கு அறிவிக்கப்பட்டிருந்த கட்டிடங்களின் பெறுமதி ரூபா 635,961,733 தொகையாக காணப்பட்டதுடன், கணக்கீடு செய்யப்பட்டிருந்த பெறுமதி ரூபா 1,161,120,186 தொகையாக காணப்பட்டமையால் ரூபா 525,158,453 இற்கான தேறிய வித்தியாசமொன்று காணப்பட்டது. | கொம்ட்ரோலர் ஜெனரால் திணைக்களத்தினால் வெளியிட்டிருந்த 06/2023 இலக்கம் கொண்ட சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் படி தற்போது அறிமுகப்படுத்தியுள்ள நிகழ்வு நிலை நிதியல்லாத சொத்துக்களின் முகாமைத்துவ முறைமையின் கீழ் திணைக்களத்திற்கு சொந்தமான அனைத்து சொத்துக்களும் அறிவிக்கப்பட வேண்டியுள்ளதுடன் மற்றும் தற்போது வாகனங்களுக்கான மொடியுள்கள் மாத்திரம் செயற்படுத்தப்பட்டிருந்ததென. | திணைக்களத்திற்கு சொந்தமான அனைத்துச் சொத்துக்களும் கொம்ட்ரோலர் ஜெனராலிற்கு அறிவித்து சரியாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iv) | 2022 ஆண்டின் ஸிகாஸ் கணினி அச்சுப் பதிவின் படி அலுவலக உபகரணங்களின் இறுதி மீதி ரூபா 76,362,170 தொகையாக இருந்த போதிலும், அந்த மீதி 2023 ஆண்டின் ஆரம்ப மீதியென பதிவு செய்யும் போது ரூபா 75,972,550 தொகை என பதிவு செய்யப்பட்டிருந்தமையால் ரூபா 389,620 தொகை குறைவாக கணக்குகளில் காட்டப்பட்டிருந்தது. | 2023 ஆண்டு அரச கணக்குத் திணைக்களத்திற்கு சென்று குறிப்பிட்ட சரி செய்தல்கள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்த போதிலும் மேலும், அதற்காக மேற்கொள்ள வேண்டிய சீராக்கல்கள் காணப்படுவதனால் எதிர் காலத்திலும் அரச கணக்குத் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு மீதிகளை சரி செய்து அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | பிழைகளை சரியாக இனங்கண்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (v) | நிதிக் கூற்றுக்களில் நிதி அல்லாத சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்த ரூபா 1,161,120,186 தொகைக்கான கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புக்களின் பெறுமதியில் சட்டரீதியாக திணைக்களத்திற்கு உரிமையை உரித்தாக்கியிருக்காத 13 காணிகளில் காணப்படும் ரூபா 1,107,464,440 தொகைக்கான கட்டிடங்களின் பெறுமதி அடங்கிய போதிலும் மீளாய்வாண்டின் போது குறிப்பிட்ட காணிகளை உரித்தாக்கி சீராக்கல்கள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | திணைக்களத்திற்கு சொந்தமான காணிகளை தீர்த்த பின்னர் அந்த காணிகளின் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு எதிர்காலத்தில் சரியாக தரவுகள் கணக்கீடு செய்யப்படும் என. | திணைக்களத்திற்கு சொந்தமான காணிகளை விரைவாக தீர்த்து கணக்கு அறிக்கைகளில் கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புக்களின் பெறுமதிகள் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (vi) | 2022 ஆண்டின் நிதியல்லாத சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்த கணினி துணைக் கருவு மீதி, மின்சார உபகரண மீதி மற்றும் மருத்துவ உபகரண மீதி முறையே ரூபா 5,881,397 தொகை, ரூபா 14,835,143 தொகை ரூபா 275,315,783 தொகையாக காணப்பட்டது. அவ்வாறாயினும், முறையே முன்னைய ஆண்டுகளின் போது மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 10,375,439 தொகை, ரூபா 6,273,197 தொகை மற்றும் ரூபா 3,638,628 இற்கான கொள்வனவுகள் குறிப்பிட்ட விடயங்களின் கீழ் காட்டப்படாமல் அலுவலக உபகரணங்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது. மேலும், 2022 ஆண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 20,729,160 இற்கான கணினிகள், கணினி துணைக் கருவிகளின் கீழ் காட்டப்படாமல் அலுவலக உபகரணங்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது. மாற்றக் கட்டளை பெற்ற பின்னர் மேற்கூறிய குறைபாடு சரி செய்யப்படும் என காட்டப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டிலும் அதனை சரி செய்திருக்கவில்லை. | ஒட்டுமொத்தமாக குறிப்பிட்ட உபகரணங்களின் பெறுமதியில் வித்தியாசங்கள் காணப்படாததுடன், அந்தப் பெறுமதிகள் வகைப்படுத்தும் போது ஏற்பட்டிருந்த வழுவினை சரி செய்வதற்காக ஒட்டுமொத்த சொத்துக்கள் தரவுக் கோப்பும் மீண்டும் நாளதுவரையாக்கல் மேற்கொள்ளப்பட வேண்டியதனால் எதிர்காலத்தில் இது தொடர்பாக நடவடிக்கை எடுத்து அறிவிப்பதற்கு குறித்துக்கொள்ளப்பட்டது என. | நிதியல்லாத சொத்துக்கள் கணக்கீடு செய்யும் போது சரியாக வகைப்படுத்த வேண்டும். தனதாக்கிய நிலையான சொத்துக்கள் தொடர்பாக நிதியாண்டின் நிதியல்லாத சொத்துக்களின் கீழ் பதியப்படுகின்றதென பொறுப்பாக இருக்க வேண்டும். |
| (vii) | ஓட்ட நிலையில் காணப்படாத 02 கப் வண்டிகள், ஒரு பஸ் வண்டி மற்றும் 04 மோட்டார் சைக்கிள்கள் அப்புறப்படுத்தும் அலுவல்களுக்காக 2022.02.14 சுகாதார அமைச்சுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும், அந்த சொத்துக்களின் கிரயத்தை இனங்கண்டு நிதியல்லாத சொத்துக்களிலிருந்து அகற்றுவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும் நிதிக் கூற்றுக்களில் குறிப்பொன்றின் மூலம் அந்த சொத்துக்கள் தொடர்பாக தகவல்களை வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஸிகாஸ் முறைமையில் உள்ளீடு செய்துள்ள வாகனங்கள் தொடர்பான தகவல்கள் போதியளவானதாக காணப்படாமையால் இந்த சரி செய்தல்கள் தொடர்ந்தும் தாமதமாக இருப்பதுடன், தரவு முறைமையை சரி செய்து இது தொடர்பாக அறிவிப்பதற்காக குறித்துக்கொண்டேன் என. | அப்புறப்படுத்தல்கள் அலுவல்கள் விரைவாக பூர்த்தி செய்யப்பட வேண்டியதுடன், அந்த சொத்துக்களின் கிரயத்தை இனங்கண்டு நிதிக்கூற்றுக்களில் இருந்து அகற்றுவதற்கு மற்றும் நிதிக் கூற்றுக்களில் குறிப்புக்கள் மூலம் தகவல்களை வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (viii) | செயற்பாட்டுக் குத்தகையை தவணை செலுத்தும் முறையின் கீழ் 2012 ஆண்டின் போது டொயாடோ லங்கா நிறுவனத்திலிருந்து கொள்வனவு செய்திருந்த கிரயம் | ஸிகாஸ் முறைமையில் உள்ளீடு செய்துள்ள வாகனங்கள் தொடர்பான தகவல்கள் போதியளவானதாக | நிதி அல்லாத சொத்துக்கள் என கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 8,400,000 இற்கான வேன் வண்டியொன்று செயற்பாட்டுக் குத்தகை கால வரையின் பின்னர் திணைக்களத்திற்கு உரித்தாக்கியிருந்த போதிலும் நிதி அல்லாத சொத்துக்கள் என கணக்கீடு செய்திருக்கவில்லை. | காணப்படாமையால் இந்த சரி செய்தல்கள் தொடர்ந்தும் தாமதமாக இருப்பதுடன், தரவு முறைமையை சரி செய்து இது தொடர்பாக அறிவிப்பதற்காக குறித்துக்கொள்ளப்பட்டது. | |
| (ix) | வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புக்களின் கிரயத்தை மூலதனப்படுத்தாமல் 2018 ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை நிர்மாண வேலைகளுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்தச் செலகளும் நடைபெறு வேலைகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது. அதன்படி, மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நடைபெறு வேலைக் கணக்கின் மீதி ரூபா 1,035,539,978 தொகை வரை அதிகரித்திருந்தது. | ஸிகாஸ் கணினி முறைமையில் சரி செய்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது என. | வேலை பூர்த்தி செய்யப்பட்டுள்ள கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புக்களின் கிரயம் மூலதனப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**(ஈ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(i)** | **பிணைப் பதிவேடு** | | |
| | நிதிப் பிரமாணம் 891(1) இணங்க, பிணை வைத்தல் பதிவேடு நாளதுவரை ஆக்கப்பட்டிருக்கவில்லை. | பிணை வைக்க வேண்டி உத்தியோகத்தர்கள் தொடர்பாக சிக்கல் தன்மையை தீர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், அந்த விடயம் முழுமையடைந்தவுடன் பிணை வைப்பும் செய்யும் பதிவேடு நாளதுவரை ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயறப்பட வேண்டும். |
| **(ii)** | **வாகன சம்பவ குறிப்பேடு** | | |
| | நிதிப் பிரமாணம் 1645(அ) இணங்க, நாளதுவரையாக்கபட்டு பேணிச் சென்றிருக்கவில்லை. | நாளதுவரை ஆக்கப்பட்டு வருகின்றது என. | - மேற்படி - |

**(iii) காசோலைகள் ஒப்படைக்கும் பதிவேடு**

| | | |
|---|---|---|
| நிதிப் பிரமாணம் 388 இணங்க நாளதுவரையாக்கபட்டு பேணிச் சென்றிருக்கவில்லை. | காசோலை ஒப்படைக்கும் பதிவேடு நாளதுவரை ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன், 2023 திசெம்பர் மாதத்தில் கொடுப்பனவு செய்யப்பட்ட காசோலைகள் அதிகமாக இருந்ததால் உரிய முறையில் அந்த பதிவேடு நாளதுவரை ஆக்குவதற்கு முடியாமல் இருந்தது என. | - மேற்படி - |

### 1.6.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்திற்கு சொந்தமாக ரூபா 93,944,999 தொகை பெறுமதியான வாகனங்கள் காணப்படுகின்றதென நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த போதிலும், ஸிகாஸ் கணினி முறைமையில் ஒவ்வொரு வாகனங்கள் தொடர்பான விரிவான தகவல்கள் குறிப்பிடப்பட்டிருக்காமையால் திணைக்களத்திற்கு சொந்தமான அனைத்து வாகனங்களின் பெறுமதி நிதிக் கூற்றுக்களில் சித்தரித்துக் காட்டப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துவதற்கு முடியாமல் இருந்தது. | ஸிகாஸ் முறைமைக்கு உள்ளீடு செய்யப்பட்டுள்ள வாகனங்கள் தொடர்பான தகவல்கள் போதியளவானதாக காணப்படாமையால் இந்த சரி செய்தல் தொடர்ந்தும் தாமதமாகி உள்ளதுடன், போக்குவரத்து மற்றும் கணக்குப் பிரிவுகள் தொடர்புபடுத்தி அரச கணக்குத் திணைக்களத்தின் உதவியுடன் தரவு முறைமையை சரி செய்து எதிர் காலத்தில் அறிவிப்பதற்கு குறித்துக்கொள்ளப்பட்டதென. | ஸிகாஸ் கணினி முறைமையில் ஒவ்வொரு வாகனங்கள் தொடர்பான விரிவான தகவல்கள் குறிப்பிடப்பட்டு போதியளவு பதிவுகள் பேணப்பட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.3 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் பிரிவு 38 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் படி திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டுக்கான வெற்றிகரமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று | திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் மூலம் வெற்றிரமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று பேணிச் செல்வதற்கு தேவையான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு குறிப்பிட்ட உத்தியோகத்தர்களுக்கு | 2018 இன் 19 இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் பிரிவு 38 இன் ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | |
|---|---|
| தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுகின்றதென பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டிதுடன், அந்த முறைமையை வெற்றிகரத் தன்மை தொடர்பாக காலத்துக்குக் காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன்படி முறைமையை வெற்றிகரமாக மேற்கொள்ளப்படுவதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும், அந்த மீளாய்வு எழுத்துமூலம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறான மீளாய்வாண்டொன்று மேற்கொள்ளப்பட்டதற்கான கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | அறிவுருத்தப்பட்டு குறைபாடுகளை சரி செய்வதற்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், அது தொடர்பான தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என அறிவிக்கின்றேன். வருடாந்த மீளாய்வொன்று 2024 ஆண்டு முதல் அரச கணக்காய்வுப் பிரிவுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், கணக்காய்வு குழுக் கூட்டங்களும் நடாத்தப்பட்டு வருகின்றது என. |

**1.6.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1961 இன் 31 இலக்க ஆயுர்வேத சட்டம் | சட்டத்தின் 10 பிரிவிற்கு இணங்க ஐங்கரும மற்றும் மஸாஜ் நிலையங்களை பதிவு செய்தல் தொடர்பான ஏற்பாடுகள் சட்டத்தில் உட்படுத்தியிருக்காமையால் ஐங்கரும மருத்துவ முறை பயன்படுத்தலை ஒழுங்குறுத்தலுக்கு முடியாமல் இருந்தது. | ஐங்கரும மற்றும் மஸாஜ் நிலையங்கள் பதிவு செய்தல் தொடர்பான ஏற்பாடுகள் உட்படுத்தக்கூடியவாறு ஆயுர்வேத கோவை தயாரிப்பதற்குரிய அலுவல்கள் தற்போது சட்டவரைஞரினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என. | ஐங்கரும மற்றும் மஸாஜ் நிலையங்கள் பதிவு செய்தல் தொடர்பான ஏற்பாடுகள் உட்படும் விதத்தில் சட்ட ஏற்பாடுகள் மேற் கொள்வதற்காக விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 1947 இன் 16 ஆம் இலக்க மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் பிரிவு 127 | பொரளை ஆயுர்வேத தேசிய வைத்தியசாலை போதனா வைத்தியசாலையாக அபிவிருத்தி செய்யும் 02 | குறிப்பிட்ட குறைபாடுகளை பூர்த்தி செய்வதற்காக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு 2020 ஆண்டின் போது | புதிய கட்டிடத்தின் 04 மாடிகளில் 05 பொது வாட்டுக்களில் |

| | | | |
|---|---|---|---|
| | ஆம் கட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டிருந்த 08 மாடிகளைக் கொண்ட புதிய கட்டிடத்தின் தரைமாடி உட்பட 04 மாடிகளில் 183 கட்டில்களைக் கொண்ட 05 பொது வாட்டுக்களில் நோயாளர் உபசரிப்புச் சேவை செயற்படுத்தப்பட்டிருந்த போதிலும் மாநகர சபை கட்டளைச் சட்டத்திற்கு இணங்க இணக்கச் சான்றுகள் பெறுவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஏற்பாடுகளும் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் கொவிட் 19 நோயாளர்கள் அடுத்த கட்டிடம் ஒன்றிற்கு உட்படுத்தப்பட்டமையால் அந்தக் கருமத்தை நிறைவேற்றிக்கொள்வதற்கு முடியாது போனது எனவும், இந்த நிலைமைக்கு காரணம் திணைக்களத்தின் வினைத்திறன் இன்மையினால் ஏற்படவில்லை எனவும், ஏற்பாடுகள் ஒதுக்கிக்கொள்வதில் காணப்பட்ட சிரமமே ஆகும் என. | நோயாளர் உபசரிப்புச் சேவைகள் செயற்படுத்தப்பட்டமையால் கூடிய விரைவில் இணக்கச் சான்றிதழ் பெற்றுக்கொள்ள வேண்டும். |
| (இ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) நிதிப் பிரமாணம் 770 | பொரளை ஆயுர்வேத தேசிய வைத்தியசாலையில் உலர்ந்த மருந்து வகை களஞ்சியத்தில் நீண்ட காலம் முதல் பயன்படுத்துவதற்கு தகைமையில்லாத நிலைமையில் 12 மருந்து வகைகள் 113.5 கிலோ கிராம் 03 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாத 36 உலர்ந்த மருந்து வகைகள் 477.6 கிலோ கிராம் தொகையும் காணப்பட்ட போதிலும் அவை தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2024.06.30 திகதியில் உள்ளவாறு அல்லது அதற்கு முன்னர் நிதிப் பிரமாணங்களின் படி நடவடிக்கை எடுத்து அறிவிப்பதற்கு குறித்துக்கொள்ளப்பட்டது என. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ii) நிதிப் பிரமாணம் 756(6) | மீளாய்வாண்டு வரை எந்த வருடத்திலேனும் ஆயுர்வேத வைத்தியசாலைகளில் மொத்த களஞ்சியங்கள் மற்றும் துணைக் | மொத்தக் களஞ்சியம் மற்றும் உப களஞ்சியங்கள் தொடர்பாக இருப்பு ஆவணப்படுத்தப்பட்ட பண்டங்கள் தொடர்பாக | - மேற்படி - |

| | | | | |
|---|---|---|---|---|
| | | களஞ்சியங்கள் இருப்புக் கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவி ல்லை. | வருடாந்தக் கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்காத துடன், இந்த அலுவல்கள் பூர்த்தி செய்யப்பட்டு அறிவிப்பதற்கு குறித்துக்கொள்ளப்பட்டது. | |
| (iii) | நிதிப் பிரமாணம் 1647(ஆ) | வாகனங்களும் அவற்றின் உபகரணங்களும் உட்பட முழுமையான கணிப்பீடொன்று நடாத்த வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டில் பெறுமதி மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 13,950,000 இற்கான 05 வாகனங்கள் கணிப்பீட்டுக்கு உள்ளாக்கப்பட்டிருக்கவில் லை. | உங்களால் குறிப்பிடப்பட்ட 32-1178 இலக்க ஜீப் வண்டி திருத்த வேலைக்காக கராஜில் போடப்பட்டுள்ளதுடன், ஏனைய வாகனம் மஞ்சன்துடுவாய், கைதடி, கோனேஷ்புரி, அம்பாறை வைத்தியசாலைகளுக்கு இணைக்கப்பட்டுள்ளமையா ல் எதிர் காலத்தில் குறிப்பிட்ட குழுவின் மூலம் பரிசோனை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என. | - மேற்படி - |
| (ஈ) | 2016 திசெம்பர் 29 திகதிய 30/2016 இலக்கம் கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கையின் பந்தி 3.1 | அரசாங்க வாகனங்களில் அனைத்து எரிபொருள் பரிசோதனையின் பின்னர் 12 மாத கால வரையின் பின்னர் அல்லது 25000 கிலோ மீற்றர் ஓடிய பின்னர் அல்லது என்ஜித் தொடர்பான பிரதான திருத்த வேலையின் பின்னர் ஆகிய விடயங்களிடையே ஆரம்பத்தில் ஏற்படும் சந்தர்ப்பத்தின் பின்னர் மீண்டும் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ள வேண்டிய போதிலும் திணைக்களத்தின் வாகனங்கள் தொடர்பாக அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. | 2024 ஆண்டிற்கான எரிபொருள் எரிவுப் பரிசோதனை மேற்கொள்வதற்காக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றதெனவும் மற்றும் ஜூன் 30 திகதி அளவில் அனைத்து அலுவல்களும் பூர்த்தி செய்யப்பட்டு அறிவிப்பதற்கு குறித்துக்கொள்ளப்பட்டது என. | பொது நிருவாக சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (உ) | 2009 ஏப்ரல் 16 திகதிய 09/2009 இலக்கம் கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கை | சுற்றறிக்கையின பந்தி 2(iv) இணங்க விரல் அடையாள இயந்திரத்தின் மூலம் உள்வருதல் வெளிச் செல்லல் உறுதிப்படுத்திக் கொள்ளாமல் தின வரவுப் | நோயளர் உபசரிப்பு சேவை தடையொன்று இன்றி நடாத்திச் செல்வதற்காக விரல் அடையாள இயந்திரம் பயன்படுத்தப்படாத காரணத்தினால் தின | பொது நிருவாக சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பதிவேட்டை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு மீளாய்வாண்டின் போது மேலதிக நேரம் மற்றும் விடுமுறை நாள் சம்பளம் என ரூபா 53,325,525 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | வரவுப் பதிவேட்டை அடிப்படையாகக் கொண்டு மேலதிக நேரம் மற்றும் விடுமுறை நாள் சம்பளம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது என. |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 செலவு முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தேவைப்பாட்டினை உரிய முறையில் இனங்காணாமல் 02 நிகழ்ச்சித் திட்டங்களின் செலவு விடய இலக்கம் 2003 இற்காக ரூபா 400,000 தொகை மற்றும் 2105 இற்காக 1,000,000 தொகையும் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்ட காரணத்தினால் அந்த முழுத் தொகை செலவிடப்படாமல் சேமிக்கப்பட்டிருந்தது. | சுதேச வைத்திய முறை தொடர்பான தேசிய நிறுவனத்தின் பணிப்பாளர் தனது தனிப்பட்ட வாகனத்தை பயன்படுத்துவதற்காக அங்கீகாரம் பெறப்பட்டிருந்தமையால், அந்த நிறுவனத்திற்காக தேக்கத்தினால் ஒதுக்கப்பட்டிருந்த வாகனம் தலைமை அலுவலகத்திற்கு இணைக்கப்பட்டிருந்ததனால் 220-2-4-2003 செலவு விடயத்தின் கீழ் ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தது. மேலும், 220-2-5-2105 செலவு விடயத்தின் கீழ் காணி மற்றும் காணி அபிவிருத்திற்காக குறிப்பிட்ட ஆண்டில் எதிர்பார்த்த செலவு ஏற்படாமையால் ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டது என. | ஏற்பாடுகள் திட்டத்தின் படி பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | வருடாந்த தேவைப்பாட்டினை உரிய முறையில் இனங்காணாமல் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்தமையால் 02 நிகழ்ச்சித் திட்டங்களில் 10 மூலதன செலவு விடயங்களுக்காக ரூபா 15,000,000 தொகைக்கான தேறிய ஏற்பாடுகளில் ரூபா 11,453,248 தொகை அதாவது 22 சதவீதத்திற்கும் 97 இற்கும் இடைப்பட்ட வீச்சில் ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தன. | பட்டப் பின் பட்டம் கல்வி அலுவல்களுக்காக விடுவிக்கப்பட்டிருந்த உத்தியோகத்தர்கள் குறிப்பிட்ட பாடநெறியை பூர்த்தி செய்து வழங்க வேண்டிய சான்றிதழ்களை சமர்ப்பிக்காமையின் காரணமாக, வைத்தியசாலைகளில் இயந்திர உபகரணங்கள் திருத்த வேலை அலுவல்கள் சந்தையில் நிலவிய விலைத் தளம்பல்கள் | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | | மற்றும் உதிரிப்பாகங்கள் தட்டுப்பாடு காரணத்தினால் எதிர்பார்த்தவாறு நிறைவேற்ற முடியாமல் காணப்பட்டமையால் மற்றும் நாவின்ன வைத்தியசாலையில் ஸ்கேனிங் இயந்திரத்தின் திருத்த வேலைக்காக பெறுகைகள் வழங்கப்பட்டிருந்த போதிலும் குறிப்பிட்ட வழங்குனருக்கு குறிப்பிட்ட தினம் அளவிலும் உதிரிப்பாகங்களை இறக்குமதி செய்வதற்கு முடியாமல் போதல் ஆகிய காரணங்களினால் இந்த ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்ததெனவும், மேலும் கட்டுநிதிகள் பெற்றுக்கொள்வதில் காணப்பட்ட நெருக்கமான வரையறை மற்றும் அரச செலவுகள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் படி ஏற்பாடுகள் சேமித்தல் நேரிட்டுள்ளது என. | |
| (இ) | ஆரம்ப செலவு மதிப்பீட்டில் மூலதன மட்டும் மீண்டுவரும் செலவு விடயங்கள் 16 இற்கான ஏற்பாடுகளில் 19 சதவீதம் முதல் 2000 சதவீதத்திற்கு இடைப்பட்ட வீச்சில் அதிகரித்து மற்றும் மேலும் 05 செலவு விடயங்களில் ஏற்பாடுகள் 54 சதவீதத்திற்கும் 83 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் குறைத்தும் திருத்துதல் ஆகிய விடயங்களின் காரணமாக ஆரம்ப செலவு மதிப்பீடு முறையான ஆய்வொன்றின், கவனமின்றி மற்றும் சிக்கனமின்றி தயாரிக்கப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது. | ஆரம்ப செலவு மதிப்பீடு 2022 ஆண்டின் ஆகஸ்ட் மாதம் திட்டமிட்ட போதிலும் அதன் பின்னர் நாட்டில் ஏற்பட்ட பண வீக்க நிலைமை காரணமாக அனைத்து பண்டங்கள் மற்றும் சேவைகளின் விலைகள் எதிர்பார்க்காதவாறு அதிகரித்திருந்த காரணத்தினால் அத்தியவசியமான செலவுகள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டு (அதாவது நீர், மின்சாரம், தொலைபேசி, உணவுகள் மற்றும் மருந்துகள்) நோயாளர் உபசரணை சேவையை தொடர்ச்சியாக நடாத்திச் செல்வதற்கு மேற்கொள்ளப்பட்டதென. | - மேற்படி - |

**2.2 பொறுப்புகள் மற்றும் ஈடுபாட்டுப் பொறுப்புகளுக்கு அணுகுதல்**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிப் பிரமாணம் 94(1) ஏற்பாடுகளுக்கு முரணாக 36 மீண்டுவரும் மற்றும் மூலதன | நாட்டில் நிலவிய பண வீக்க நிலைமையின் காரணமாக அனைத்து பண்டங்கள் மற்றும் | நிதிப் பிரமாணம் 94(1) ஏற்பாடுகளின் கீழ் இனங்காணப்பட வேண்டிய |

| | | | |
|---|---|---|---|
| | செலவு விடயங்களில் ரூபா 12,964,091 இற்கான சேமிப்பை மிகைத்து ரூபா 37,942,645 இற்கான பொறுப்புகளுக்கு ஆளாக்கப்பட்டிருந்தது. மேலும், செலவு விடய இலக்கம் 2-5-0-1201 இன் கீழ் காகிதாகிகள் மற்றும் அலுவலக தேவைப்பாட்டிற்காக மீளாய்வாண்டின் போது ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படாமல் பொறுப்புக்களுக்கு ஆளாக்கப்பட்டிருந்தது. | சேவைகளின் விலைகள் எதிர்பார்க்காதவாறு அதிகரித்திருந்தனால் நோயாளர்கள் உபசரிப்புச் சேவை தொடர்ச்சியாக பேணிச் செல்வதற்கும் அத்தியவசியமான செலவுகளை மேற்கொள்வதற்கும் ஏற்பாடுகள் போதியளவாக காணப்படாமையால் ஆண்டின் மத்தியில் இருந்து மேலதிக ஏற்பாடுகள் தேசிய பாதிட்டுத் திணைக்களத்தில் இருந்து விண்ணப்பித்திருந்த போதிலும் காணப்படுகின்ற ஏற்பாடுகளை முகாமைத்துவம் செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கும் படி ஆலோசனைகள் கிடைக்கப் பெற்றது எனவும், எனினும் திணைக்களத்திற்கு உரிய ஏற்பாடுகள் போதியளவாக காணப்படாத செலவுத் தலைப்புகளுக்காக மேற்கூறியவாறு ஏற்பாடுகளை மிகைத்து பொறுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டதென. | பொறுப்புக்கள், வருடாந்த மீண்டுவரும் சேவைகள் அல்லது வழங்கல்களுக்காக நேரிடக்கூடிய ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் மற்றும் மொத்த கிரய மதிப்பீட்டின் மீது ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் என வெவ்வேறாக இனங்கண்டு உரிய படிவத்தின் படி அறிவிக்க வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் இலங்கை ஆயுர்வேத மருந்துப்பொருள் கூட்டுத்தாபனத்திலிருந்து பெற்றுக்கொண்டிருந்த மருந்து வகைகளுக்காக திசெம்பர் 31 திகதியில உள்ளவாறு செலுத்த வேண்டிய தொகை ரூபா 6,710,968 தொகை என அந்த கூட்டுத்தாபனத்தின் கணக்குகளின் படி உறுதிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் அந்த கூட்டுத்தாபனத்திற்கு செலுத்த வேண்டிய தொகை ரூபா 185,000 தொகை என திணைக்களத்தின் பொறுப்புக்கள் மற்றும் ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் கூற்றில் காட்டப்பட்டிருந்தது. | 2023.12.30 திகதி வரை அறிவிக்கப்பட்டிருந்த அனைத்துப் பொறுப்புக்களும் கணக்கிற்கு உட்படுத்தப்பட்டிருந்ததுடன், அந்த பொறுப்புக்களுக்காக 2024.04.05 திகதி தீர்க்கப்பட்டிருந்தது. ஐயவினாவில் சுட்டிக்காட்டப்பட்ட விடயம் தொடர்பாக இலங்கை ஆயுர்வேத மருந்துப்பொருள் கூட்டுத்தாபன தகவல்களின் படி மீளாய்வாண்டின் பொறுப்புக்கள் மற்றும் ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் ரூபா 5,445,200 தொகை மாத்திரம் குறிப்பிடப்பட்டிருந்ததுடன். அந்தப் பொறுப்புக்களுக்காக 2023 நவம்பர் மாதத்தில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததென. | அனைத்துப் பொறுப்புக்களையும் சரியாக இனங்கண்டு பொறுப்புக்கள் மற்றும் ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் கூற்றில் காட்டப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | கடந்த ஆண்டுகளின் போது இலங்கை ஆயுர்வேத மருந்துப்பொருள் கூட்டுத்தாபனத்திலிருந்து பெற்றுக்கொண்ட மருந்துப் பொருட்களுக்காக மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 1,265,768 தொகை செலுத்த வேண்டிக் காணப்பட்டதென அந்தக் கூட்டுத்தாபனத்தின் கணக்குகளின் மூலம் உறுதிப்படுத்தியிருந்த போதிலும் அந்த பொறுப்புக்கள் திணைக்களத்தின் பொறுப்புக்கள் மற்றும் ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் கூற்றில் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆண்டிற்கு முன்னர் மருந்துப்பொருள் கூட்டுத்தாபனத்திலிருந்து பெற்றிருந்த மருந்துப் பொருட்களுக்காக 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கூட்டுத்தாபனத்திற்கு கொடுப்பனவு செய்வதற்காக உறுதிச் சீட்டுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன், அது தொடர்பாக விரிவான அறிக்கையொன்று வழங்குமாறு ஆயுர்வேத கூட்டுத்தாபனத்திற்கு கடிதமொன்று அனுப்பப்பட்டது. அந்த தகவல்கள் கிடைத்த பின்னர் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அறிவிக்கப்படும் என. | - மேற்படி - |

**2.3 ஏனைய அமைச்சுக்களிலிருந்து மற்றும் திணைக்களங்களில் இருந்து வழங்கியிருந்த ஏற்பாடுகளின் பயன்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஆயுர்வேத திணைக்களத்திற்கு ஏனைய அமைச்சுகள் மற்றும் 02 திணைக்களங்களின் 05 தேவைப்பாடுகளுக்காக வழங்கியிருந்து ரூபா 53,083,332 இற்கான ஏற்பாடுகளில் மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 15,630,895 இற்கான ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தது. அந்த ஏற்பாடுகளின் சேமிப்புக்கள் மொத்த ஏற்பாடுகளில் 08 சதவீதம் முதல் 31 சதவீதம் வரையான வீச்சை பெற்றிருந்தது. | 2023 ஆண்டின் அமைச்சரவை அங்கீகாரத்தின் மீது ஆட்சேர்க்கப்பட்ட பல்கரும அபிவிருத்தி உதவியாளர்களின் சம்பளம் பல்கரும அபிவிருத்தி செயலணித் திணைக்களத்திடமிருந்து ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அதனை இந்தத் திணைக்களத்தின் ஏற்பாடுகள் மூலம் முகாமைத்துவம் செய்வதற்கு முடியுமாக இருந்தமையால் 334-1-1-0-1003-11 செலவு விடய ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்ததென அறிவிக்கப்படுவதுடன், ஏனைய செலவு விடயங்களின் கீழ் திட்டமிடப்பட்ட அனைத்து நிகழ்ச்சித்திட்டங்களும் மதிப்பீட்டுச் செலவை விட குறைவாக நிறைவேற்றிக் கொள்வதற்கு முடியுமாக இருந்தமையால் ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டதென. | ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கியிருந்த ஏற்பாடுகள் முடிந்தளவில் ஆக்கபூர்வமாக பயன்படுத்த வேண்டும். |

## 2.4 முற்பணக் கணக்கு மீதிகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தாபனக் கோவையின் XLVIII அத்தியாயத்தின் பிரிவு 21.3 இற்கு இணங்க, வேலை இடை நிறுத்தப்பட்டிருந்த உத்தியோகத்தர் தொடர்பாக நடைபெறும் ஒழுக்காற்று விசாரணை நடைபெறும் ஒழுக்காற்று விசாரணை அலுவல்கள் முடிந்தளவு தாமதம் இன்றி பூர்த்தி செய்தல் அத்தியவசியமாக காணப்பட்ட போதிலும் வேலை இடைநிறுத்தப்பட்டு 03 வருடங்களுக்கும் 10 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலம் கடந்திருந்த 02 உத்தியோகத்தர்களின் ரூபா 177,985 தொகையும் 20 வருடங்களை மிகைத்திருந்த 05 உத்தியோகத்தர்களின் ரூபா 127,060 தொகையும் அறவீடு செய்வதற்கு முடியாமல் இருந்தது. | வேலை இடைநிறுத்தப்பட்டு 03 வருடங்களுக்கும் 10 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலம் கடந்திருந்த 02 உத்தியோகத்தர்களிடம் ரூபா 177,985 தொகைக்கான கடனை தீர்த்தல் தொடர்பாக குறிப்பிட்ட பிணையாளர்களிடம் அறவீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றதெனவும், ஒழுக்காற்று விசாரணைகள் பூர்த்தி செய்யப்பட்டு மீண்டும் சேவையில் செலுத்தப்பட்டுள்ள உத்தியோகத்தரின் சம்பளத்திலிருந்து தற்போது அறவீடு செய்தல் மேற்கொள்ளப்படுகின்றதெனவும், 05 உத்தியோகத்தர்களிடம் ரூபா 127,060 இற்கான கடனை தீர்த்தல் தொடர்பாக 20 வருடங்களை விட மிகையான காலம் கடந்திருந்தமையால் தகவல்கள் கண்டறிவதற்கு ஓரளவு கடின விடயமாக காணப்படுகின்றதெனவும், எவ்வாறாயினும், கடனை அறவீடு செய்யும் அலுவல்கள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுகின்றது என. | தொடர் செயல் நடவடிக்கை மற்றும் மேற்பார்வை மூலம் கடனை அறவீடு செய்வதற்காக விரைவுபடுத்த வேண்டும். தாபனக் கோவையில் ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்படுவதன் பொறுப்புகளை நிறைவேற்றாத உத்தியோகத்தர்களிடம் இந்தத் தொகையை அறவீடு செய்வதற்கு நிதிப் பிரமாணம் 104(2)''ஆ'' இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) | தாபனக் கோவையின் அத்தியாயம் XXIV பிரிவு 4.2.4 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க உத்தியோகத்தர் ஒருவர் ஓய்வு பெறுவதற்கு தீர்மானித்திருந்த போது அவரிடம் அறவிடப்பட வேண்டியிருந்த அனைத்து கடன் தொடர்பான விபரங்களும் ஓய்வூதியப் பணிப்பாளருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன், பிரிவு 4.2.5 இற்கு இணங்க உத்தியேகத்தரின் மாற்றப்பட்ட ஓய்வூதியத்தில் இருந்து அல்லது பணிக்கொடையில் இருந்து அறவீடு செய்யப்பட வேண்டும். எனினும், | கணக்காய்வு அவதானிப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது எனவும், மற்றும் பணம் அறவீடு செய்யும் அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதெனவும், ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களிடையே ஓய்வுபெற்று 20 வருடங்களுக்கு மிகையான காலம் கடந்திருந்த மூன்று உத்தியோகத்தர்கள் தொடர்பாக தகவல்கள் கண்டறிதல் ஓரளவு கடினமாக காணப்படுகின்றது எனவும் எவ்வாறாயினும் எதிர்காலத்தில் இந்த கடன் மீதிகள் | உத்தியோகத்தர் ஒருவரை ஓய்வு பெறச் செய்யும் போது அவரிடம் அறவிடப்பட வேண்டியுள்ள அனைத்து கடன் தொடர்பான விபரங்களும் ஓய்வூதிய பணிப்பாளருக்கு சமர்ப்பிக்காமல் மற்றும் கவனயீனமாக செயலாற்றிய உத்தியோகத்தர்கள் தொடர்பாக ஒழுக்காற்று செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஓய்வுபெற்று 02 வருடங்களை மிகைத்திருந்த 11 உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 619,110 தொகை காணப்பட்ட போதிலும், அந்த கடனை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தொடர்பான தகவல்களை கண்டறிந்து தீர்ப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும். | |
| (இ) | 2023 திசெம்பர் 31 திகதி அளவில் சேவையை விட்டுச் சென்று 01 வருடத்திற்கும் 03 வருடங்களுக்கு இடைப்பட்ட காலம் கடந்திருந்த 09 உத்தியோகத்தர்களிடம் ரூபா 701,686 தொகையும், 05 வருடங்களுக்கும் 10 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலம் கடந்திருந்த 02 உத்தியோகத்தரிடம் ரூபா 306,950 தொகையும் 20 வருடங்களை மிகைத்திருந்த 21 உத்தியோகத்தர்களிடம் ரூபா 883,610 தொகையினையும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அறவிடப்பட வேண்டிய கடனை செலுத்துமாறு உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது எனவும். 2020.06.30 திகதி அளவில் கொடுப்பனவு புறக்கணிக்கப்படின் பிணையாளர்களிடம் அறவீடு செய்து அறிவிப்பதற்கு குறித்துக்கொள்ளப்பட்டது எனவும். மேலும், ஒரு உத்தியோகத்தரினால் தவணைகளாக செலுத்துவதற்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளது என. | கடன் தொகையை அறவீடு செய்வதற்கு உடனடியாக தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | தாபனக் கோவையின் அத்தியாயம் XXIV பிரிவுகள் 4.5, 4.6 மற்றும் 6.3 மற்றும் 2019 ஜூன் 27 திகதிய இலக்கம் 05/2019 கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் 03(ஆ) பந்தி, 2017 திசெம்பர் 29 திகதிய இலக்கம் 262/2017 கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் பந்தி 04 இற்கு இணங்க இறந்த உத்தியோகத்தர்களின் கடன் மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும், இறந்து 2023 திசெம்பர் 31 திகதிக்கு 06 மாதங்களுக்கு மிகையான காலம் கடந்திருந்த 08 உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டியிருந்த மொத்தக் கடன்மீதி ரூபா 642,644 தொகை காணப்பட்டதுடன், அந்த கடனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ரூபா 49,300 இற்கான கடன் மீதியொன்றுடனான உத்தியோகத்தர் இறந்து தற்போது 20 வருடங்களுக்கு மிகையான காலம் கடந்திருந்ததெனவும், கூட்டுத்தொகை ரூபா 121,250 தொகைக்கான 02 உத்தியோகத்தர்கள் தொடர்பாக இறப்பு பணிக்கொடை செலுத்தப்படும் சந்தர்ப்பத்தில் அறவீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றதெனவும், மற்றும் ரூபா 119,550 தொகைக்கான கடன்மீதி இறப்பு பணிக்கொடை மற்றும் தபுதாரர் ஓய்வூதியம் தயாரிக்கப்பட்டு வருவதுடன், அதனை செலுத்துவதற்கு முன்வரும் சந்தர்ப்பத்தில் உடனடியாக கடன்மீதியை தீர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது எனவும், ரூபா 178,910 இற்கான | தாபனக் கோவை மற்றும் குறிப்பிட்ட நிதிச் சுற்றறிக்கைகளின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | கடன் மீதியொன்றுடனான உத்தியோகத்தர் உரித்தாகும் பிரதேச செயலகமாகன எல்பிடிய பிரதேச செயலகத்திற்கு சொத்துக்கள் தொடர்பான உறுதியொன்று கிடைத்திருந்ததுடன், தபுதாரர் ஓய்வூதியம் செலுத்துதல் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனவும், அதன்படி, இறப்புப் பணிக்கொடை செலுத்தும் போது இந்தத் தொகை தீர்க்கப்பட்டுள்ளதா என ஓய்வூதியத் திணைக்களத்தின் மூலம் தகவல்களை கண்டறிந்த பின்னர் தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு அறிவிக்கப்படும் எனவும். கூட்டுத்தொகை ரூபா 173,634 தொகைக்கான 03 உத்தியோகத்தர்கள் குறிப்பிட்ட இறப்பு பணிக்கொடை இதுவரை செலுத்தப்பட்டிருக்காமையால் செலுத்தும் சந்தர்ப்பத்தில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | |

**2.5 வைப்புக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 03 திறைசேரி பொது வைப்புக் கணக்குகளில் காணப்பட்ட 2 வருடங்களுக்கும் 5 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலவதியாகிய மற்றும் கூட்டுத்தொகை ரூபா 354,958 இற்கான வைப்புக்கள், நிதிப் பிரமாணம் 571 இற்கு இணங்க ஆதன அழிப்புச் செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும், 2 வருடங்களை மிகைத்துள்ள வைப்புக்கள் காணப்படுவதற்கான காரணமாக இருந்த விடயங்களை அரச கணக்குத் திணைக்களத்தின் வழிகாட்டல் 03 இற்கு இணங்க அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. | மேற்கூறியவாறு 2021.12.31 திகதியில் உள்ளவாறு குறிப்பிட்ட வைப்புக்கள் இரண்டு வருடங்களை மிகைத்திருக்காமையால் 1 – 2 வருட காலம் தொடர்பாக பதிவு செய்யப்பட்டிருந்தது. கணக்காய்வு அவதானிப்புக்களின் படி அதனை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதிப் பிரமாணம் 571 இற்கு இணங்க காலவதியாகிய வைப்புக்களை ஆதனவழிப்புச் செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) மூன்றாம் தரப்பினருக்கு மீண்டும் செலுத்துவதற்காக தற்காலிகமாக தடுத்து வைக்கப்பட்ட வைப்புக் கணக்குகள் தொடர்பாக தனிப்பட்ட மீதிகளின் அட்டவணையின் படி 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மீதி ரூபா 3,038,130 தொகை எனினும், வைப்புக் கணக்கின் படி ரூபா 3,762,375 தொகை காணப்பட்டது. அதன்படி, ரூபா 724,245 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது. | 2021.12.31 திகதியில் உள்ளவாறு வைப்புக் கணக்கு மீதி மற்றும் தனிப்பட்ட மீதிகளின் அட்டவணை சமப்படுத்தப்பட்டது என. | வித்தியாசத்திற்கான காரணங்களை இனங்கண்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**2.6 நிமித்தத் துணைக் கட்டுநிதி வழங்குதல் மற்றும் தீர்த்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 திகதிய 01/2020 இலக்கம் கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் மூலம் திருத்தப்பட்டிருந்த நிதிப் பிரமாணம் 371(2)(ஆ) இற்கு இணங்க 06 உத்தியோகத்தர்களுக்கு 04 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 469,179 தொகைக்கான நிமித்த துணைக்கட்டு நிதி செலவிடப்படாமல் 03 நாட்களுக்கும் 20 நாட்களுக்கும் இடைப்பட்ட காலம் தடுத்து வைக்கப்பட்டு முழுத் தொகையும் தீர்க்கப்பட்டிருந்தது. | கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிடப்பட்டுள்ள முற்பணங்கள் தொடர்பாக திட்டமிடப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்படாமை, நிகழ்ச்சித் திட்டங்கள் பிற்போடல் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை பூர்த்தி செய்வதற்கு போதியளவு காலம் காணப்படாமை ஆகிய காரணங்களினால் நிமித்தத் துணைக் கட்டுநிதி முழுமையாக தீரக்கப்பட்டிருந்தது. நிகழ்ச்சித் திட்டங்கள் உண்மையாகவே நடாத்துதல் உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் முற்பணம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கும் படி குறிப்பிட்ட உத்தியோகத்தர்களை அறிவுறுத்தப்பட்டது என. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 திட்டமிடல்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்கு நேரொத்ததாக நடவடிக்கை எடுத்திருக்காததுடன், | இது தொடர்பாக தற்போது மூன்று பிரதான செயலாற்றுகை சுட்டிகள் இனங்காணப்பட்டுள்ளது எனவும், முன்னேற்றத்தை அறிவிப்பதற்கு | வளங்கள் மூலம் உச்சமட்ட பயன்களை பெற்றுக்கொள்ளக் கூடியவாறு தேவையான கால ரீதியான |

| | | |
|---|---|---|
| குறிக்கோள்கள் மற்றும் கொள்கைகள் மாற்றமடையும் போது அதன்படி செயல் நடவடிக்கைத் திட்டத்தை திருத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்துக்கொள்ளப்பட்டுள்ளது எனவும். | திருத்தங்களுடன் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.2 பணிப் பொறுப்புக்களை நிறைவேற்றாமை**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆயுர்வேத சமூக சுகாதார மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டம் 2001 ஆண்டு முதல் முன்னோடிச் செயற்திட்டமொன்றாக அனுராதபுர மாவட்டத்தில் செயற்படுத்தப்பட்டு 2005 ஆண்டு முதல் ஏனைய மாவட்டங்களுக்கும் விரிவாக்கப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டு வரையும் அது அனுராதபுர மாவட்டத்தில் மாத்திரம் செயற்படுத்தப்பட்டிருந்ததுடன், செயற்திட்டத்திற்காக 2005 ஆண்டு முதல் 2021 ஆண்டு வரை ரூபா 877.2 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. 2022 ஆண்டு முதல் செயற்திட்டத்திற்காக தனியாக ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருக்காததுடன், அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தில் நோயாளர் சிகிச்சை சேவை செயற்திட்டத்தின் கீழ் மீண்டுவரும் செலவுகளுக்காக மாத்திரம் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டு 218 உத்தியோகத்தர்களுக்கு சம்பளங்கள் மற்றும் படிகளாக ரூபா 287.4 மில்லியன் தொகையும் ஏனைய செலவுகளுக்காக ரூபா 5.5 மில்லியன் தொகையும் ஆக மொத்தம் ரூபா 292.9 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஏனைய மாவட்டங்களுக்கு விரிவாக்கக்கூடிய அளவு வெற்றிகரமாக செயற்படுத்தப்படாத இந்த செயற்திட்டத்திற்குரிய நிறுவாகச் செலவு திணைக்களத்தின் நோயாளர் சிகிச்சை சேவை செலவு | இந்த செயற்திட்டத்தை பூர்த்தி செய்து செயற்திட்டத்தின் கீழ் காணப்படும் மனித மற்றும் பௌதீக வளங்கள் முறைப் பிரகாரம் வடமத்திய மாகாண சபை மட்டத்தில் செயற்படுத்தப்படும் ஆயுர்வேத சமூக சுகாதார சேவைக்கு ஒப்படைப்பதற்கு தேவையாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என. | செயற்திட்ட கால எல்லை முடிவடைந்து செயற்திட்டம் செயற்படுத்தப்படாவிடின் அதற்கு சொந்தமாக காணப்படும் பௌதீக மற்றும் மனித வளங்கள் திணைக்களத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு அல்லது வடமத்திய மாகாண மட்டத்தில் செயற்படுத்தப்படுகின்ற ஆயுர்வேத சமூக சுகாதார சேவைக்காக பயன்படுத்துவதற்கு தேவையான கொள்கைசார் அங்கீகாரம் பெற்றுக்கொண்டு அதன்படி, செயற்திட்ட அலுவலக பராமரிப்பு மற்றும் பதவியணியினருக்காக மேற்கொள்ளப்படும் செலவுகளை வரையறுத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | விடயத்தின் மூலம் அடங்கப்பட்டு தொடர்ந்து பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | தேவைப்பாட்டினை முறையாக இனங்காணாமல் மற்றும் சாத்தியக்கூறு ஆய்வொன்று இன்றி 2015 மார்ச் 16 திகதி ரூபா 28 மில்லியன் செலவிடப்பட்டு பண்டாரநாயக ஆயுர்வேத ஆய்வு நிலையத்திற்கு 14 இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், அவற்றில் ரூபா 21 மில்லியன் தொகை பெறுமதியான 08 இயந்திரங்கள் 2024 ஏப்ரல் 10 திகதி அளவிலும் பொறுத்தப்பட்டிருக்கவில்லை. மொத்தக் கிரயம் ரூபா 14,591,311 தொகைக்கான 06 இயந்திரங்கள் உற்பத்தி நிலையத்திற்காக தேவைப்படாது என 2020 ஒக்தோபர் 05 திகதி நியமனம் செய்யப்பட்டிருந்த குழு ஒன்றினால் இனங்காணப்பட்டிருந்தது. முறையான ஒப்பந்த வேலை உடன்படிக்கை ஒன்றிற்கு மற்றும் சேவைகள் மற்றும் திருத்த வேலைக்கான உடன்படிக்கைகளுக்கு அணுகியிருக்காமல் இந்த ஒப்பந்த வேலை செயற்படுத்தப்பட்டிருந்தமையால் பொறுத்தப்பட்டிருந்த இயந்திர உபகரணங்களும் மீளாய்வாண்டளவில் பயன்படுத்த முடியாத நிலைமையை அடைந்திருந்தது. இதன்படி, இந்த செயற்திட்டத்திற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 28,342,712 இற்கான மொத்த தொகையும் சிக்கனமற்ற செலவொன்றாக இருந்தது. | நிதி அமைச்சின் அங்கீகாரத்துடன் தற்போது அந்த குறிப்பிட்ட இயந்திரங்கள் அல்லது உபகரணங்கள் ஆயுர்வேத மருந்துப்பொருட்கள் கூட்டுத்தாபனத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என. | தேவைப்பாட்டினை சரியாக இனங்காணாமல் மற்றும் முறையான சாத்தியக்கூறு ஆய்வொன்று இன்றி இந்த கொள்வனவுக்கு பங்களிப்பு செய்த அனைத்து உத்தியோகத்தர் தொடர்பாகவும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | ஆயுர்வேத திணைக்களத்தின் மற்றும் அதன் இணைந்த நிறுவனங்கள், வைத்தியசாலைகள், மருத்துவ நிலையங்கள் உட்பட முழு நிறுவன முறைமையும் அடங்கக்கூடியவாறு முகாமைத்துவ தகவல் முறைமையொன்று (MIS) | 2023 ஆண்டின் போது இதற்காக ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை என. | திணைக்களத்தின் பிரதான அலுவலக வளாகம், வைத்தியசாலைகள் மூலிகைத் தோட்டங்கள் சமூக சுகாதார பிராந்திய அலுவலகங்கள் ஆகிய |

| | | |
|---|---|---|
| தயாரிப்பதற்காக 2021 ஆண்டு போலவே 2022 ஆண்டின் போது ரூபா 25 மில்லியன் வீதம் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அந்தக் கருமம் மீளாய்வாண்டிலும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | | அனைத்து பிரிவுகளின் அலுவல்களும் கூட்டிணைக்கக்கூடியவாறு முகாமைத்துவ தரவு முறைமையொன்று நிறுவப்பட வேண்டும். |

**3.3 செயலாற்றுகைச் சுட்டிகள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| திணைக்களம் மற்றும் இணைந்த நிறுவனங்கள், வைத்தியசாலைகள், மருத்துவ நிலையங்கள் மூலிகைத் தோட்டங்கள் உட்பட முழுமையான நிறுவன முறைமைக்குரிய தொழிற்பாடுகளின் முன்னேற்றத்தை மதிப்பாய்வு செய்யக்கூடியவாறு செயலாற்றுகை சுட்டிகள் நிறுவியிருக்காததுடன், தொழிற்படுகளின் முன்னேற்றமும் மீளாய்வு செய்திருக்கவில்லை. | இது தொடர்பாக தற்போது 03 பிரதான செயலாற்றுகை சுட்டிகள் இனங்காணப்பட்டிருந்ததெனவும், முன்னேற்றத்திற்கு அறிவிப்பதற்கு குறித்துக்கொள்ளப்பட்டது என. | செயலாற்றுகை சுட்டிகள் விரைவாக நிறுவப்பட்டு தொழிற்பாடுகளின் முன்னேற்றம் மீளாய்வு செய்யப்பட வேண்டும். |

**3.4 வருடாந்த செயலாற்றுகை அறிக்கை**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களுடன் 2022 வருடாந்த செயலாற்று அறிக்கையின் வரைபு ஒன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2020 ஆகஸ்ட் 28 திகதிய இலக்கம் 2/2020 கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் பந்தி 10.2 இன் கீழ் அரச நிதித் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டிருந்த வழிகாட்டல் இலக்கம் 14 இல் காட்டப்பட்டுள்ள படிவத்திற்கு இணங்க அந்த அறிக்கை சரியாக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆகஸ்ட் 28 திகதிய 02/2020 கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கைக்கு இணங்க அதன் அத்தியாயம் 3 இற்குரிய நிதிக் கூற்றுக்கள் கணக்குப் பிரிவினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதன் 4 ஆவது அத்தியாயம் தொடர்பாக செயலாற்றுகை சுட்டிகள் மற்றும் 5 ஆம் அத்தியாயத்திற்குரிய நிலைவேறாக அபிவிருத்திக் குறிக்கோள் 2023 வருட இறுதி வரை இனங்காணப்பட்டிருக்கவில்லை. அதன்படி, 4, 5, 6 மற்றும் 7 அத்தியாயங்களுடன் வரைபு ஒன்று செயலாற்றல் அறிக்கை அரச கணக்குப் பகுதிக்கு அனுப்புவதற்கு இணக்கம் தெரிவிக்கப்படுகின்றது என. | 2023 ஆண்டு முதல் தொடர்ந்து வருடாந்த கணக்குகளுடன் சரியான படிவத்திற்கு இணங்க தயாரிக்கப்பட்டு வருடாந்த அறிக்கையின் வரைபு ஒன்றும் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**3.5 பெறுகைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆகஸ்ட் 28 திகதிய இலக்கம் 02/2020 கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கைக்கு இணங்க வருடாந்த பெறுகைத் திட்டம் நடைமுறை ஆண்டு திசெம்பர் 10 திகதிக்கு முன்னர் தயாரிக்கப்பட்டு அதற்காக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் அங்கீகாரத்தை பெற்று அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்ப வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது அதன்படி செயற்பட்டிருக்கவில்லை. | இலக்கம் 02/2020 கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கைக்கு இணங்க 2024 ஆண்டிற்குரிய பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கையொப்பத்துடன், கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கு குறித்துக்கொள்ளப்பட்டது என. | 2020 ஆகஸ்ட் 28 திகதிய இலக்கம் 02/2020 கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) | ரூபா 1,164.13 மில்லியன் தொகை செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த பொரளை ஆயுர்வேத தேசிய வைத்தியசாலையின் புதிய கட்டிடத்தின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு 03 வருடங்களுக்கு மிகையான காலம் கடந்திருந்த போதிலும், கட்டிடத்தின் கொள்திறனை பயன்படுத்துவதற்கு தேவையான பிரதான நீர்த்தொட்டி ஒன்று வடிகாலமைப்பு முறைமையொன்று பிரதான மின்சார தொடர்பு ஆகிய கருமங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.<br>அதற்காக 2023 பெப்ரவரி 10 திகதி ரூபா 715,267,800 இற்கான மொத்த கிரய மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அதனை நிறைவேற்றுவதற்கு போதிய நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | இந்த வாட்டு கட்டிடத் தொகுதியில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள குறைபாடுகளை பூர்த்தி செய்வதற்காக உங்கள் ஐயவினாவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் தேவைப்படுகின்றது. அதன்படி, 2024 பாதீட்டு ஏற்பாடுகளின் படி ரூபா 450 மில்லியனிற்கான தொகையொன்று ஒதுக்கப்பட்டிருந்ததுடன், அதன் மூலம் குறிப்பிட்ட கட்டிடத்திற்காக இணக்கச் சான்றிதழ் பெற்றுக்கொள்வதற்காக தேவையான வேலைப் பகுதிகள் நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதுடன், அதற்குரிய நாடளாவிய விலைகூறல் அழைப்பு 2024 ஏப்ரல் மாதத்தில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது எனவும், தற்போது 03 மாடிகளில் நோயாளர்கள் உட்படுத்தப்பட்டிருந்த போதிலும் முறையான நோயாளர்கள் உபசரணை சேவை ஒன்றிற்கு தேவையான அடிப்படைத் தேவைப்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை என. | கட்டிடத்தை முழுமையாக பயன்படுத்துவதற்காக திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அதன்படி விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 5.6.3 இற்கு இணங்க ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனம் ஒன்றிற்கு அனுப்பப்பட்டு நியமங்கள் தொடர்பான ஆய்வுகூட பரிசோதனை அறிக்கை பெற்றுக்கொள்ளாமல் மீளாய்வாண்டின் நான்காவது காலாண்டில் 1980 போத்தல்கள் நல்லெண்ணெய் 22 போத்தல்கள் இலுப்பெண்ணெய் 400 போத்தல்கள் தேன் பாணி மற்றும் 200 போத்தல்கள் கடுகு எண்ணெய் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | தரச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளும் முறைமையொன்று/ நியமம் தொடர்பான ஆய்வுகூட பரிசோதனை அறிக்கை பெற்றுக்கொள்ளல் வைத்திசாலையில் வழமையாக செயற்படுத்தப்படாததுடன், ஏதேனும் மருந்தொன்று தொடர்பாக அவ்வாறான பரிசோதனையொன்று தேவைப்படுகின்றதென மருந்து வகைக் குழுவினால் இனங்காணப்பட்ட சந்தர்ப்பத்தில் அவ்வாறான மருந்துகளை கொழும்பு பல்கலை கழகத்திற்கு அல்லது நாவின்ன பண்டாரநாயக ஞாபகர்த்த ஆய்வு நிலையத்திற்கு அனுப்பப்பட்டு அறிக்கை பெற்றுக்கொள்ளும் செய்முறையொன்று காணப்படுகின்றதென. | மருந்து வகைகள் உற்பத்தி செய்வதற்காக கொள்வனவு செய்யும் மூலப் பொருட்கள் தொடர்பாக அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 5.6.3 இற்கு இணங்க ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனம் ஒன்றிற்கு அனுப்பப்பட்டு தரம் தொடர்பாக ஆய்வுகூட பரிசோதனை அறிக்கை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்தின் அலுவல்களுக்காக பயன்படுத்தப்படுகின்ற 27 காணிகள் காணப்பட்ட போதிலும் திணைக்களத்தின் பிரதான அலுவலக வளாகம், பொரளை போதனா வைத்தியசாலை உட்பட வைத்தியசாலைகள் மூலிகைத் தோட்டங்கள் சமூக சுகாதார பிரதேச அலுவலகங்கள் மற்றும் சுற்றுலா விடுதிகள் அமைந்துள்ள 19 காணிகள் மீளாய்வாண்டு இறுதியளவில் திணைக்களத்திற்கு உரித்தாக்கியிருக்கவில்லை. | இந்த காணிகள் திணைக்களத்திற்கு தற்போது அனுபவிக்கும் அடிப்படையில் உரித்தான நிறுவனங்களில் இருந்து உரித்தாக்கிக் கொள்வதற்காக அந்த நிறுவனங்களுடன் முகாமைத்துவ அலுவல்கள் மேற்கொள்ளப்படுகின்றதுடன், பூர்த்தியடைந்தவுடனே அறிவிப்பதற்காக குறித்துக்கொள்ளப்பட்டது என. | குறிப்பிட்ட காணிகளை உரித்தாக்கும் அலுவல்கள் விரைவுபடுத்த வேண்டும். |
| (ஆ) | ஐக்கிய அமெரிக்க இராட்சிய வைத்திய சேவை மன்றம் எனும் தன்னார்வள அமைப்பொன்றின் உதவியொன்றாக 2022 ஆகஸ்ட் மாதம் கிடைத்திருந்த 19 வகையைச் சேர்ந்த 377 அலகுகள் நோயாளர் உபசரணை | 2022.08.19 USA Hospital Service Foundation மூலம் கிடைத்திருந்த பெறுமதியை கண்டறிய முடியாத உபகரணங்கள் மற்றும் உபகரண அலகுகள் தொடர்பாக | நோயாளர் உபசரணை உபகரண அலகுகளை பயன்படுத்துவதற்கு மற்றும் அந்த பண்டங்களின் பெறுமதியை கணித்து கணக்கீடு செய்வதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | உபகரணங்கள் பயன்படுத்தப்படாமல் பொரளை ஆயுர்வேத வைத்தியசாலையில் புதிய எட்டு மாடிக் கட்டிடத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்ததுடன், அந்தப் பண்டங்களின் பெறுமதியை கணித்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சுகாதார அமைச்சின உயிரியல் மருத்துவ பொறியியலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது எனவும். உயிரியல் மருத்துவ பொறியியல் உத்தியோகத்தர் இந்த அனைத்து உபகரணங்கள் பரிசோதனை மேற்கொண்டு இதற்காக தேவைப்படும் ஏனைய உபகரணப் பட்டியலொன்று வழங்குவதற்கு இணங்கியிருந்தது என. | நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | விஷேடத்துவ வைத்தியர் ஒருவர் காணப்படாமையால் தொண்டை, காது மூக்கு தொடர்பான 10 வகையான சத்திர சிகிச்சை உபகரணங்கள் 35 அலகுகள் மற்றும் கொவிட் காலத்தில் சீனா அரசாங்கத்தினால் நன்கொடையாக கிடைத்திருந்த 21,120 தொகை தனிப்பட்ட பாதுகாப்பு ஆடைத் தொகுதி பொரளை ஆயுர்வேத தேசிய வைத்தியசாலையின் புதிய எட்டு மாடிக் கட்டிடத்தில் விளைவற்றுக் காணப்பட்டதென அவதானிக்கப்பட்டது. | இந்த அனேகமான பண்டங்கள் ENT பிரிவுக்கு உரிய பண்டங்களாகும். தொண்டை, காது மற்றும் மூக்கு தொடர்பாக (ENT) விஷேடத்துவ மருத்துவ உத்தியோகத்தர் ஒருவர் காணப்படாததுடன், பல்கலைக் கழகத்தின் அறிவுரை மருத்துவ உத்தியோகத்தர் மூலம் இந்தப் பிரிவு செயற்படுத்தப்படுகின்றது என. இந்தப் பண்டங்களை பயன்படுத்தி நாளாந்தம் சிகிச்சை தேவைப்பாடு காணப்பட்ட போதிலும் அதற்காக விஷேடத்துவ வைத்தியரின் வெற்றிடமொன்று காணப்படுவதுடன் அதை நிரப்புவதற்காக தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என. | தொண்டை, காது மூக்கு தொடர்பான அறுவை சிகிச்சை தொடர்பான 10 வகையான அறுவை சிகிச்சை உபகரண 35 அலகுகள் மற்றும் சீன அரசாங்கத்தினால் நன்கொடையாக கிடைத்திருந்த 21,120 தனிப்பட்ட பாதுகாப்பு ஆடைத் தொகுதிகள் பயன்படுத்துவதற்கு கூடிய விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | பொரளை ஆயுர்வேத தேசிய வைத்தியசாலையின் புதிய எட்டு மாடிக் கட்டிடத்தின் பொது வாட்டு 288 கட்டில்கள் கொள்திறனில் 120 எனப்படும் 42 சதவீதம் வைத்தியசாலையின் பழைய பொது வாட்டுக்களின் 274 கட்டில்களில் 76 எனப்படும் 28 சதவீதம் குறை பயன்பாட்டுடன் காணப்பட்டதுடன், உரிய கட்டிடத்தின் நவீன அறை வசதிகள் அடங்கிய 88 கட்டில்களின் கொள்திறனையுடைய பணம் செலுத்தும் அனைத்து வாட்டுக்கள் மற்றும் பழைய 32 பணம் செலுத்தும் வாட்டுக்களில் 08 உம் குறைபயன்பாட்டுடன் காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது. | தாதிகள் பதவியணி பற்றாக்குறையாக காணப்பட்டமையால் இந்த வாட்டுக்களை நடாத்திச் செல்வதற்கு முடியாமல் இருக்கின்றதென அறிவிக்கப்படுவதுடன், பதவியணியினர் சேர்க்கப்பட்டவுடன் இந்த வாட்டுக்கள் பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தேவையான பதவியணியினர் கூடிய விரைவில் சேர்க்கப்பட்டு குறை பயன்பாட்டுடன் காணப்படும் சாதாரண வாட்டுக்கள், நவீன அறை வசதிகள் அடங்கிய புதிய பணம் செலுத்தும் வாட்டு அனைத்தும் மற்றும் பழைய பணம் செலுத்தும் வாட்டின் நோயாளர் உபசரிப்புத் தேவைக்காக பயன்படுத்த வேண்டும். |

### 3.7 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கொழும்பு மாநகர சபையின் பொதுமக்கள் சுகாதார பரிசோதகர்களினால் பொரளை இலங்கை தேசிய ஆயுர்வேத வைத்தியசாலைக் களஞ்சியத்தில் காணப்பட்ட கொத்தமல்லி இருப்பொன்று பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு அவை நுகர்வுக்கு தகைமை உடையவை அல்ல என அறிவித்து மருந்து வகை உற்பத்தி நிலையத்தின் அறையொன்றில் இடப்பட்டு சீல் வைக்கப்பட்டு ஒரு வருடத்திற்கு மிகையான காலம் கடந்திருந்த போதிலும், உரிய முறையில் தொடர் நடவடிக்கை எடுக்கப்படாமையால் ரூபா 327,700 கிரயத்தை உடைய 1,130 கிலோகிராம் கொத்தமல்லி அழிவடைந்திருந்தது. அவ்வாறாயினும் நிதிப் பிரமாணங்கள் 104(1) இன் படி அதற்குப் பொறுப்பான தரப்பினரை உறுதிப்படுத்தி அந்த இருப்பின் நட்டத்தை அவர்களிடம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை ஏதும் எடுத்திருக்கவில்லை. | குறிப்பிட்ட நட்டம் கொழும்பு மாநகர சபையிலிருந்து அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், முன்னேற்றத்தை அறிவிப்பதற்கு குறித்துக்கொண்டேன் என. | நிதிப் பிரமாணம் 104(1) இன் படி அதற்கு பொறுப்புச் சொல்ல வேண்டிய தரப்பினர்களை தீர்மானித்து அந்த இருப்பின் நட்டத்தை அவர்களிடம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு செயற்பட வேண்டும். |
| (ஆ) | மங்சன்தொடுவாய் ஆயுர்வேத வைத்தியசாலையில் கடமையாற்றி வென்னப்புவ பிரதேச சபைக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள ஆயுர்வேத வைத்தியர் ஒருவருக்கு 2012 ஜூலை மாதம் முதல் 2013 செப்தம்பர் மாதம் வரை 15 மாதங்களில் திணைக்களத்தினால் சம்பளம் என ரூபா 548,376 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்பட்டு பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்காமல் 25 சதவீத மிகை விதிப்பொன்று உட்பட 2024 ஏப்ரல் 05 திகதி அளவில் ரூபா 519,600 தொகை மாத்திரம் அறவீடு | குறிப்பிட்ட வைத்தியரிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 185,870 இற்கான தொகையினை அறவீடு செய்வதற்காக அறிவிக்கப்பட்டுள்ளதுடன், 2024.04.03 திகதி ரூபா 20,000 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன், மீதித் தொகையை அறவீடு செய்தல் தொடர்பாக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளும் படி விசாரணைப் பிரிவிற்கு அறிவுறுத்தப்பட்டது என. | மேலும் அறவிடப்பட வேண்டிய தொகையை அறவீடு செய்வதற்காக நிதிப் பிரமாணம் 104(2) "ஆ" இணங்க பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தருக்கு எதிராக மிகை விதிப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

செய்யப்பட்டிருந்தது. இந்த சம்பவத்திற்கு 10 வருடங்களுக்கு மிகையான காலம் கடந்திருந்த போதிலும், மீதித் தொகையை அறவீடு செய்வதற்காக மற்றும் உரிய பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு நிதிப் பிரமாணங்கள் 104(2) ''ஆ'' இன் படி பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்களிடம் மிகை விதிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 3.8 முகாமைத்துவ பலவீனங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்திற்கு சொந்தமாக 08 மூலிகைத் தோட்டங்கள் காணப்படுவதுடன், மீளாய்வாண்டின் போது 05 மூலிகைத் தோட்டங்களில் இருந்து மாத்திரம் 35 வகையான மூலப் பொருட்கள் 629.17 கிலோ கிராம் மருந்து மூலப்பொருட்கள் பெற்றுக்கொண்டு ஆயுர்வேத தேசிய வைத்தியசாலைக்கு 552 கிலோ கிராமும் பண்டாரநாயக ஞாபகார்த்த ஆயுர்வேத ஆய்வு நிலையத்திற்கு 18 கிலோ கிராம்களும் ஆயுர்வேத மருந்து வகைகள் கூட்டுத்தாபனத்திற்கு 59.5 கிலோ கிராம்களும வழங்கப்பட்டிருந்தது. நாவின்ன, கன்னெலிய மற்றும் மிகிந்தளை ஆகிய மூலிகைத் தோட்டங்களில் இருந்து முன்னைய ஆண்டைப் போலவே மீளாய்வாண்டிலும் மருந்து வகை ஏதும் வழங்கியிருக்கவில்லை. | நாவின்ன மூலிகைத் தோட்டம் ஆய்வு மற்றும் விரிவாக்கல் சேவைக்காக மாத்திரம் பயன்படுத்தப்படுவதுடன் அது ஆய்வு நிலையத்தின் தோட்டம் என கணிக்கப்படுகின்றதென. மிகிந்தளை இதுவரை மூலிகைத் தோட்டம் என செயற்படுத்தியிருக்காததுடன், ஆய்வு வைத்தியசாலை அமைந்துள்ள காணி என கணிக்கப்படுகின்றது என. கன்னெலிய மூலிகைத் தோட்டத்தினுள்ளும் பாரியளவில் மூலிகைகள் பயிர் செய்யப்படாததுடன், அது ஆய்வு மற்றும் விரிவாக்கல் சேவைக்காக மாத்திரம் பயன்படுத்தப்படுகின்றதென மற்றும் தற்போது மூலிகைத் தோட்டங்களில் பணிப் பொறுப்புக்கள் மற்றும் குறிக்கோள்கள் திருத்தப்பட்ட சட்டத்தின் மூலம் மாற்றப்பட்டு பாரியளவில் மருந்துகள் உற்பத்தி அலுவல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என. | மூலிகைத் தோட்டங்கள் மூலம் கிடைக்கக் கூடிய விளைச்சல்கள் ஆயுர்வேத வைத்தியசாலைகளின் மருந்து உற்பத்திக்கு பயன்படுத்துவதற்கும் மற்றும் அது தொடர்பான போதியளவு அறிக்கைகள் பேணப்படுவதற்கும் முறையான பொறிமுறையொன்று நிறுவப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | திணைக்களத்திற்கு சொந்தமாக 57 வாகனங்கள் காணப்பட்டதுடன் இந்த வாகனங்களுக்குரிய சம்பவக் குறிப்பேடு மற்றும் ஓட்ட அட்டவணைகள் முறைப் பிரகாரம் நாளதுவரை ஆக்கப்பட்டு பேணியிருக்காமை, காலரீதியாக எரிபொருள் பரிசோதனை நடாத்தியிருக்காமை, சில உத்தியோகத்தர்கள் முறையான அங்கீகாரமின்றி வாகனங்களை பயன்படுத்தி இருத்தல், வாகனங்களை முறைகேடாக பயன்படுத்திய உத்தியோகத்தர் மற்றும் சாரதிகள் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்காமை, வாகனங்களுக்காக எரிபொருள் நிரப்பும் போது அந்த அலுவல்கள் பதவியணி உத்தியோகத்தர் ஒருவரின் மேற்பார்வையின் கீழ் மேற்கொண்டிருக்காமை, சில உத்தியோகத்தர்கள் முறையான அங்கீகாரமின்றி வானங்களை பயன்படுத்தியிருத்தல், மற்றும் வாகனங்களை முறைகேடாக பயன்படுத்திய உத்தியோகத்தர் மற்றும் சாரதிகள் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படாமை, வாகனங்களின் ஓட்ட அனுமதிப்பத்திர பரிசோதனைகள் உரிய முறையில் மேற்கொள்ளப்படாமை மற்றும் சாரதிகளின் ஒழுங்கீனங்களை தவிர்த்துக் கொள்வதற்கு போதியளவு கட்டுப்பாட்டு முறை கடைபிடித்திருக்காமை ஆகிய விடயங்கள் காரணமாக திணைக்களத்தின் வாகன நிருவாகம் மற்றும் வாகனங்களின் பாதுகாப்பு தொடர்பாக திருப்திகரமான நிலைமையொன்று காணப்படவில்லை என அவதானிக்கப்பட்டது. | சம்பவக் குறிப்பேடு நாளதுவரையாக ஆக்கப்பட்டு உள்ளதெனவும் போக்குவரத்துப் பிரிவில் அனைத்து கடமை அலுவல்களுக்குமாக போக்குவரத்து உத்தியோகத்தர் மாத்திரமே காணப்படுவதனால் நாளாந்த ஓட்ட அட்டவணைகள் தொடர்ச்சியாக பரிசோதனை செய்வதற்கு முடியாமல் காணப்படுவதுடன் உங்களால் சுட்டிக் காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பாக உத்தியோகத்தர்களை அறிவுருத்தப்பட்டு அனைத்து சந்தர்ப்பங்களிலும் ஓட்ட அங்கீகாரப் பத்திரத்தில் பதவியணி உத்தியோகத்தரின் பரிந்துரை மற்றும் அங்கீகாரத்தின் படி கடமைகளுக்காக வாகனங்கள் ஈடுபடுத்தப்படுவதுடன் சில சந்தர்ப்பங்களில் பதவியணி உத்தியோகத்தர்களின் அலுவலகங்களில் தங்கியிருக்காத சந்தர்ப்பங்களில் கடமையின் தன்மையைப் பொருத்து பதவியணி உத்தியோகத்தரின் வாய்மொழி மூலமான அங்கீகாரத்துடன் வாகனங்கள் கடமைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டதெனவும் எவ்வாறாயினும் இந்த நிலைமையை கட்டுப்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என. | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரையின் படி கட்டுப்பாட்டு நடைமுறை உரிய முறையில் நடைபெறுகின்றது என அவதானிக்கப்படாமையால் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பாக கூடிய கவனம் செலுத்தப்பட்டு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | பல வருட காலமாக அங்கீகரிக்கப்பட்ட விடுமுறைகளின் எண்ணிக்கையை மிகைத்து விடுமுறைகள் பெற்றிருந்த பொரள்ள தேசிய வைத்தியசாலையின் ஆயுள்வேத | ஆயுள்வேத சேவை உதவியாளர்களுக்காக 2023 மார்ச் 01 திகதி முதல் செயற்படுமாறு பதவியுயர்வு வழங்குவதற்கு உரிய விண்ணப்பங்கள் தலைமை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரையின் படி கட்டுப்பாட்டு நடைமுறை உரிய முறையில் நடைபெறுகின்றது என |

| | | | |
|---|---|---|---|
| | சேவை உதவியாளர்கள் 08 பேரின் பதவியுயர்வு விண்ணப்பம் பரிந்துரைக்கப்பட்டு திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கும் போது அவர்களின் சம்பளமற்ற விடுமுறை நாட்கள் தொடர்பான விபரங்கள் காட்டப்பட்டிருக்காமையால் அது தொடர்பாக கவனம் செலுத்தாமல் 2023 மார்ச் 01 திகதி முதல் செயற்படுமாறு அந்த உத்தியோகத்தர்களுக்கு பதவியுயர்வு வழங்கப்பட்டிருந்தது. | அலுவலகத்திற்கு பரிந்துரைக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்ட போது அவர்கள் பெற்றிருந்த சம்பளமற்ற விடுமுறை தொடர்பாக வெவ்வேறாக காட்டப்படவில்லை என ஏற்றுக் கொள்வதுடன் விடுமுறைகள் தொடர்பாக காட்டப்பட்டிருந்த விடயங்கள் சரி செய்வதற்கும் எதிர்காலத்தில் இந்த நிலைமை ஏற்படுவதை கட்டுப்படுத்துமாறும் வைத்தியசாலை பணிப்பாளருக்கு அறிவிக்கப்பட்டது என. | அவதானிக்கப்படாமையால் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பாக கூடிய கவனம் செலுத்தப்பட்டு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | பொரளை தேசிய ஆயுர்வேத வைத்தியசாலையில் கடமையாற்றும் 44 உத்தியோகத்தரினால் முறையான அங்கீகாரமின்றி பெற்றுக் கொண்டிருந்த விடுமுறைகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட வரையறையை மிகைத்து பெற்றுக் கொண்டிருந்த விடுமுறை நாட்கள் சம்பளமற்ற விடுமுறைகள் என கணித்து நடவடிக்கை எடுக்காமையால் ரூபா 453,475 இற்கான சம்பளம் மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. | அரச சுகாதார முகாமைத்துவ உதவி உத்தியோகத்தர்கள் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 12 ஆகக் காணப்பட்டதுடன் அப்போது 04 உத்தியோகத்தர்கள் மாத்திரமே கடமையாற்றினார். எனவே இந்த உத்தியோகத்தர்களின் தட்டுப்பாடு காரணமாக வரையறுக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் தொகையினரை கொண்டு நிறைவேற்றிக் கொள்வதற்கு தேவைப்பட்ட காரணத்தினால் முறையான அங்கீகாரத்துடன் மற்றும் அறிவுருத்தப்படாமல் ஊழியர்களினால் பெற்றுக் கொள்ளப்படும் விடுமுறைகள் தொடர்பாக குறிப்பிட்ட காலப்பகுதியில் அறிவுருத்துவதற்கு முடியாமல் போனது எனவும் கருணையுடன் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன் என. இந்த நிலைமையினை எதிர்காலத்தில் சரி செய்து கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது என. | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரையின் படி கட்டுப்பாட்டு நடைமுறை உரிய முறையில் நடைபெறுகின்றது என அவதானிக்கப்படாமையால் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பாக கூடிய கவனம் செலுத்தப்பட்டு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | கொழும்பு பல்கலை கழத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் சுதேச வைத்திய பட்டப் பின் பட்ட நிறுவகம் 2017 ஜூன் 02 திகதி முதல் பொரளை ஆயுர்வேத தேசிய வைத்தியசாலையின் 05 ஆவது | சுதேச வைத்திய பட்டப்பின் பட்ட நிறுவகம் பொரளை ஆயுர்வேத வைத்தியசாலையின் 05 மாடியில் நிறுவப்பட்டமை தொடர்பாக முறையான கையொப்பமிடப்பட்ட | சுதேச வைத்திய பட்டபின் பட்ட நிறுவனத்துடன் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று அணுகுவதற்கு நடவடிக்கை எடுக்க |

| | | | |
|---|---|---|---|
| | மாடியில் நிறுவப்பட்ட போதிலும் அதற்காக முறையான உடன்படிக்கையொன்று அணுகியிருக்காததுடன், மாதாந்த வாடகையும் அறவீடு செய்திருக்கவில்லை. மேலும், குறிப்பிட்ட நிறுவனத்தினால் 2018 முதல் 2023 நவம்பர் வரை பயன்படுத்தப்பட்டிருந்த மின்சாரத்திற்காக திணைக்களம் கணிக்கப்பட்டிருந்த ரூபா 7,571,445 இற்கான நிலுவை மின்சார நுகர்வுக் கட்டணம் அறவீடு செய்வதற்கு மீளாய்வாண்டு இறுதி வரையும் முடியாமல் இருந்தது. | புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றுக்கு அணுகியிருந்ததற்கான ஆவணங்கள் ஏதும் எம்மிடம் காணப்படாததுடன், அது தொடர்பாக கலந்துரையாடி தொடர் நடவடிக்கை எடுப்பதற்கு இணங்குகின்றேன் என. முறைப் பிரகாரம் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் பெறுமதி மதிப்பீட்டு அறிக்கையொன்று பெற்றுக்கொண்டு கட்டணம் அறவீடு செய்வதற்கு கலந்துரையாடல் மட்டத்தில் காணப்படுகின்றது எனவும் குறிப்பிட்ட அலுவல்கள் பூர்த்தி செய்யப்பட்டு கணக்காய்விற்கு அறிவிப்பதற்கு குறித்துக்கொண்டேன் என. நிலுவை நீர் நுகர்வுக் கட்டணம் மற்றும் நிலுவை மின்சாரக் கட்டணம் அறவீடு செய்தல் தொடர்பாக குறிப்பிட்ட நிறுவனத்தை அறிவுறுத்தியதுடன், அதில் 2023 திசெம்பர் மாதம் வரை குறிப்பிட்ட நீர் நுகர்வுக் கட்டணம் என ரூபா 22,200 இற்கான தொகையொன்று செலுத்தியிருந்தது என. | வேண்டியதுடன் விலை மதிப்பீட்டுத் திணைக்களம் மூலம் பெறுமதி மதிப்பீட்டு அறிக்கையொன்று பெற்றுக்கொண்டு கட்டணம் அறவீடு செய்வதற்கு முறையான உடன்படிக்கையொன்று அணுகி மாதாந்த வாடகையை அறவீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | பொரளை தேசிய ஆயுர்வேத வைத்தியசாலையில் நடாத்தி செல்லப்படுகின்ற வியாபார குடில்களை பரிசோதனை செய்து பெறுமதி மதிப்பீடு செய்வதற்காக நியமனம் செய்யப்பட்ட குழுவினால் 2020 மார்ச் 14 திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்த அவதானிப்புக்களின் படி வைத்தியசாலையின் சிற்றுண்டிச்சாலை நலனோம்பு சங்கம் ஒன்றினால் ரூபா 41,600 இற்கான மாதாந்த வாடகைக்கு வெளித் தரப்பினர் ஒருவருக்கு சாட்டப்பட்டுள்ளதுடன், குறிப்பிட்ட வாடகை அந்த சங்கத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததென கண்டறியப்பட்டது. 2020 ஜூன் 24 திகதிய இலக்கம் 02/03/பெறுமதிமதிப்பீடு/2020 இலக்கம் கொண்ட ஆயுர்வேத | ஆயுர்வேத தேசிய வைத்தியசாலை ஊழியர் நலனோம்பு சங்கத்தின் செயலாளருக்கு அனுப்பப்பட்ட எனது இலக்கம் 03/01/05-2-ii மற்றும் 2021.03.26 திகதிய கடிதத்தில் காட்டப்பட்டுள்ளவாறு மாதாந்த குத்தகை புறக்கணிப்பு என கணிக்கப்பட்டிருந்த ரூபா 400,000 இற்கான தொகை அப்போதைய நலனோம்புச் சங்கத்தின் நிறைவேற்றுக் குழு பிரதிநிதிகளின் சம்பளத்திலிருந்து அறவீடு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளதென குறிப்பிட்ட அறவீடுகள் 2024 ஏப்ரல் மாதம் முதல் சம்பளத்திலிருந்து அறவீடு செய்து அதன் முன்னேற்றத்தை உங்களுக்கு அறிவிக்க | குறிப்பிட்ட பணம் நலனோம்பு சங்கத்திடம் அறவீடு செய்து அரச வருமானத்திற்கு செலவு வைப்பதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆணையாளரின் கடிதத்தின் மூலம் 2020 ஜூன் மாதம் வரை அறவிடப்பட்ட வாடகைத் தொகை அரச வருமானத்திற்கு செலவு வைக்க வேண்டும் என நலனோம்பு சங்கத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அந்தப் பணம் அரச வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | குறித்துக்கொண்டேன் என. | |
| (எ) | இலங்கை ஆயுர்வேத மருந்துப் பொருட்கள் கூட்டுத் தாபனத்தினால் 2017 ஆண்டின் போது ரூபா 641,128 தொகை செலவிடப்பட்டு பொரளை ஆயுர்வேத போதனா வைத்தியசாலை வளாகத்தில் விற்பனை நிலையமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. அதற்காக மாதாந்த வாடகை ரூபா 19,000 பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், 2024 ஜனவரி அளவிலும் ரூபா 437,000 இற்கான நிலுவை வாடகை அறவீடு செய்திருக்காததுடன், இலங்கை ஆயுர்வேத மருந்துப் பொருட்கள் கூட்டுத்தாபனத்துடன், உரிய நிபந்தனைகள் அடங்கிய உடன்படிக்கை ஒன்றுக்கு அணுகுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஆயுர்வேத மருந்துப் பொருட்கள் கூட்டுத்தாபன தலைவரின் MKT/BORELLA/2018 இலக்கம் கொண்ட மற்றும் 2022.08.19 திகதிய கடிதத்தின் மூலம் குத்தகை செலுத்தி இந்த வைத்தியசாலையின் விற்பனை குடில் நடாத்திச் செல்லல் கூட்டுத்தாபனத்திற்கு நட்டமாக காணப்படுவதென அறிவித்து பொது மக்கள் சேவையொன்று பெற வேண்டிய இந்த விற்பனை நிலையத்திற்காக வாடகை செலுத்தாமல் முன்னிருந்தவாறே நடாத்திச் செல்வதற்கு சந்தர்ப்பம் வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கும் படி கோறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளதென அதன் பின்னர் அது தொடர்பாக எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டதுடன், இது தொடர்பாக அமைச்சுச் செயலாளரை அறிவுறுத்தி தேவையான தொடர் நடவடிக்கை தொடர்பாக அறிவிப்பதற்கு குறித்துக் கொள்ளப்பட்டதென. இது தொடர்பாக இலங்கை ஆயுர்வேத மருந்துப் பொருட்கள் கூட்டுத்தாபனத்துடன் நிபந்தனைகளுடன் உடன்படிக்கையொன்றிற்கு அணுகுவதற்கு 2024 ஜூலை 31 திகதிக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்டு அறிவிப்பதற்கு குறித்துக்கொண்டேன் என. | இலங்கை ஆயுர்வேத மருந்துப் பொருட்கள் கூட்டுத்தாபனத்துடன், குறிப்பிட்ட நிபந்தனைகள் அடங்கிய உடன்படிக்கையொன்று அணுகுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | வைத்தியசாலை வளவில் நடாத்தப்பட்டு வந்த தேசிய பண்ணை விலங்குகள் சபையின் (NLDB) பால் விற்பனை நிலையம் 2014 ஆண்டு முதல் நடாத்திச் செல்லப்பட்டிருந்தது. 2022 ஜனவரி 31 திகதி அந்த விற்பனைக் குடிலில் இருந்து ரூபா 6,000 இற்கான மாதாந்த வாடகையொன்று அறவீடு செய்வதற்கு பெறுமதி மதிப்பீடு செய்திருந்த போதிலும், 2023 ஜனவரி முதல் திசெம்பர் வரையான காலப் பகுதிகள் தொடர்பாக ரூபா 72,000 தொகை பெற வேண்டிய நிலுவை வாடகையை அறவீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுத்திருக்காததுடன், தேசிய பண்ணை விலங்கு சபையுடன் குறிப்பிட்ட நிபந்தனைகள் அடங்கிய உடன்படிக்கைக்கு அணுகுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பெற வேண்டிய வாடகைத் தொகையை அறவீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அறிவிக்கப்படும் எனவும், அது தொடர்பாக தேசிய பண்ணை விலங்குகள் சபையுடன் நிபந்தனைகள் அடங்கிய உடன்படிக்கையை அணுகுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன், எதிர் காலத்தில் நிபந்தனைகள் அடங்கிய எழுத்துமூல உடன்படிக்கைக்கு அணுகுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | தேசிய பண்ணை விலங்கு சபையுடன் குறிப்பிட்ட நிபந்தனைகள் அடங்கிய உடன்படிக்கையொன்றுக்கு அணுகுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.9 அரசாங்க உத்தியோகத்தர்கள் பிணை வைத்தல்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அரசாங்க உத்தியோகத்தர்களின் பிணை கட்டளைச் சட்டத்தின் அதிகாரம் 612, நிதிப் பிரமாணம் 880 மற்றும் 881 மற்றும் 2020 ஆகஸ்ட் 28 திகதிய இலக்கம் 01/2020 கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் 09 பந்திக்கு இணங்க 2024 மார்ச் 31 திகதி அளவில் ஆயுர்வேத திணைக்களம் மற்றும் அதற்கு உரித்தான நிறுவனங்களில் பிணை வைக்க வேண்டிய 18 உத்தியோகத்தர்கள் குறிப்பிட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க பிணை வைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர் தொடர்பாக சிக்கல் தன்மையை தீர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | நிதிப் பிரமாணம் 880 மற்றும் 881 மற்றும் 2020 ஆகஸ்ட் 28 திகதிய இலக்கம் 01/2020 கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் 09 பந்திக்கு இணங்க பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் பிணை வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நிதிப் பிரமாணம் 892 இற்கு இணங்க பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்களின் திருத்தப்பட்ட அறிக்கையொன்று ஒவ்வொரு 03 வருடங்கள் முடிவடைந்த பின்னர் | 2024 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட மூன்று வருடங்களுக்கு ஒருமுறை நிதிப் பிரமாணம் 892 இற்கு இணங்க திருத்திய அறிக்கையை அனுப்புவதற்கு | நிதிப் பிரமாணம் 892 இற்கு இணங்க பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்களின் திருத்திய |

| | | |
|---|---|---|
| வரக்கூடிய பெப்ரவரி 15 திகதிக்கு முன்னர் குறிப்பிட்ட அமைச்சின் செயலாளர் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்தது. இந்த அறிக்கையுடன் மேலும் பிணை வைக்கத் தேவையில்லாத உத்தியோகத்தர்களின் பெயர்கள் அடங்கிய விரிவான அறிக்கையொன்று அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கை எடுக்கப்படும் என. | அறிக்கையொன்று சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4. நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களை நெருங்குதல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி சட்டத்தின் பிரிவுகள் 3.6, 3.9, 11 மற்றும் 11.2 இற்கு இணங்க நிறுவனத்தின் குறிக்கோளை நெருங்குவதற்காக தமது வழங்களை செயற்திறனுடன் செயற்படுத்த வேண்டியதுடன் நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை நெருங்குவதற்காக நிறுவனத்தினால் அடைந்து கொள்ள வேண்டிய இலக்குகள் மற்றும் அந்த இலக்குகளை அடைந்து கொள்வதற்காக காணப்படும் இடைவெளிகளும், முன்னேற்றத்தை அளவை செய்வதற்காக பொருத்தமான சுட்டிகளை இனங்காண வேண்டியிருந்தது. எனினும் திணைக்களத்தினால் அவ்வாறான சுட்டிகள் இனங்கண்டு குறிக்கோள்களிலிருந்து நெருங்கிய அளவு மற்றும் விலகல்கள் போலவே கவனம் செலுத்த வேண்டிய பல்வேறு துறைகள் இனங்கண்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் தயாரித்தல் தொடர்பாக இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தின் உதவியை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் 2024.06.30 திகதி குறிப்பிட்ட அலுவல்களை நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என. | நிலையான அபிவிருத்தி குறிக்கோளை நெருங்குதல் தொடர்பான இலக்குகள் சுட்டிகளை இனங்காண்பதற்கு மற்றும் முன்னேற்றத்தை அளவை செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 5. மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்திற்காக முகாமைத்துவ தரவு முறைமை யொன்று தயாரிக்கப்பட்டு செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டிலும் குறிப்பிட்ட தரவு முறைமை நிறுவப்பட்டிருக்கவில்லை. அதன் படி திணைக்களம் மற்றும் அதனோடு இணைந்த நிறுவனங்கள், வைத்தியசாலைகள், மருத்துவ நிலையங்கள் உட்பட அனைத்து நிறுவன முறைமை தொடர்பாகவும் நாளதுவரை ஆக்கப்பட்ட முகாமைத்துவ தகவல்கள் செயற்திறனுடன் பெற்றுக் கொள்வதற்கு முடியாமல் இருப்பதுடன் திணைக்களத்தின் பதவியணியினரின் தினவரவு மற்றும் வெளிச்செல்லல் பதிவு செய்தலின் கட்டுப்பாடு செயலாற்றுகை கட்டுப்பாடு, சம்பளக் கட்டுப்பாடு, மேலதிக நேர செலவுக் கட்டுப்பாடு, தனிப்பட்ட கோவை கட்டுப்பாடு ஆகிய கட்டுப்பாடுகள் பலவீன மட்டத்தில் காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது. | மனிதவள முகாமைத்துவ முறைமை நிறுவுவதற்கு திறைசேரியுடன் செயற்பட்டு வருவதுடன் முன்னேற்றத்தை எதிர்காலத்தில் அறிவிப்பதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது என. | திணைக்களத்தின் பிரதான அலுவலக வளாகம், வைத்தியசாலைகள், மூலிகைத் தோட்டங்கள், சமூக சுகாதார பிரதேச காரியாலயங்கள் ஆகிய அனைத்து பிரிவுகளையும் தொடர்புபடுத்தி முடியுமான தரவு முறைமையொன்று நிருவப்பட வேண்டும். |
| (ஆ) | 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 2,363 காணப்பட்டதுடன், அத் திகதியில் உள்ளவாறு உள்ளவாறான பதவியணி 1,681 ஆகக் காணப்பட்டமையால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் 28 சதவீதத்திற்கு சமமான 658 வெற்றிடங்கள் காணப்பட்டது. மேலும் இந்த வெற்றிடங்களில் 109 சிரேஷ்ட மட்ட வெற்றிடங்களும், 33 மூன்றாம் மட்ட வெற்றிடங்களும், 296 இரண்டாம் மட்ட வெற்றிடங்களும் மற்றும் 220 ஆரம்ப மட்ட வெற்றிடங்களும் காணப்படுவதனால் திணைக்களத்தின் மற்றும் ஆயுள்வேத வைத்தியசாலைகளின் | இந்தத் திணைக்களத்தின் வெற்றிடமாகக் காணப்படும் இலங்கை ஆயுள்வேத மருத்துவ நிருவாகப் பதவி தரம் II இற்கு ஆட்சேர்ப்பதற்காக நேர்முகப் பரீட்சை 2024.04.02, 04,08,18 மற்றும் 25 ஆகிய திகதிகளில் நடாத்தப்படும். தற்போது அப் பதவிகளில் 20 வெற்றிடங்கள் காணப்படுவதுடன் இந்த நேர்முகப் பரீட்சையின் மூலம் தேவையான தகைமைகளை பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்கள் அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்காக தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேலும் விஷேட தரத்திற்கு சேர்ப்பதற்கு நேர்முகப் பரீட்சை 2024.04.30 திகதி நடாத்துவதற்கு | சிரேஷ்ட மட்ட பதவிகள் மற்றும் வைத்தியாலைகளின் அத்தியவசதியான பதவிகளுக்காக முக்கியத்துவம் வழங்கி காணப்படும் மனித வளங்களை உச்ச மட்ட ஆக்கபூர்வத் தன்மை பெற்றுக் கொள்வதற்காக பதவியணியின் மறுசீரமைப்பு மேற்கொள்வதற்கு அல்லது வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செயலாற்றுகைக்கு கூடிய தாக்கத்தினை ஏற்படுத்தியிருந்தது. | திட்டமிடப்பட்டுள்ளது. அதே போல் 64 பட்டதாரி தாதி உத்தியோகத்தர் எதிர்காலத்தில் ஆட்சேர்ப்பதற்கு அமைச்சின் அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டுள்ளது. | |
| (இ) | பண்டார நாயக்க ஞாபகர்த்த ஆய்வு நிலையத்திற்காக ஒவ்வொரு விடயத்துறை தொடர்பாக 18 ஆய்வு அதிகாரிகள் பதவிகள் மற்றும் 12 ஆய்வு உதவியாளர் பதவிகளும் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் அவற்றில் எவரும் ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன் ஷமல் ராஜபக்ஷ ஆய்வு வைத்தியசாலைக்கு ஆய்வுப் பதவியணியொன்று அங்கீகரித்திருக்கவில்லை. அதன் படி ஆயுள்வேத ஆய்வு வைத்தியசாலைகள் நிறுவுவதன் மூலம் எதிர்பார்க்கும் செயலாற்றுகைக்கு பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. | நாவின்ன பண்டாரநாயக்க ஞாபகர்த்த ஆயுள்வேத ஆய்வு நிலையத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட ஆய்வு உத்தியோகத்தர் மற்றும் ஆய்வு உதவியாளர் பதவிக்காக ஆட்சேர்ப்பது தொடர்பாக எதிர்காலத்தில் கவனம் செலுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என. | ஆயுள்வேத ஆய்வு வைத்தியசாலைகள் நிறுவப்படுவதன் மூலம் எதிர்பார்க்கப்படும் செயலாற்றுகையை நெருங்குவதற்காக ஒவ்வொரு விடயத்துறை தொடர்பாகவும் ஆய்வு உத்தியோகத்தர்கள் மற்றும் ஆய்வு உதவியாளர்கள் பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | திணைக்களத்தின் தலைமை அலுவலகம், ஆயுள்வேத வைத்தியசாலைகள் மற்றும் 9 பிரிவுகளுக்காக நிரந்தர உத்தியோகத்தர்கள் நியமனம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் ஆயுர்வேத ஆணையாளர் நாயக பதவிக்கு முழு நேர அடிப்படையில் பதில் கடமையாற்றுவதற்கும், பிரதி ஆயுள்வேத ஆணையாளர் பதவிக்கு மற்றும் சுதேச வைத்திய முறை தொடர்பாக தேசிய நிறுவனத்தின் பணிப்பாளர் பதவிக்காக முழு நேர அடிப்படையில் கடமை நிறைவேற்றுவதற்காகவும், உதவி ஆணையாளர்கள் - கலைசார்ர், உதவிப் பணிப்பாளர் (கல்வி தொழிநுட்பம்), 08 வைத்தியசாலை பணிப்பாளர் பதவிகள் மற்றும் 02 பிரதிப் பணிப்பாளர் பதவிகளுக்காக கடமைகளை அணவல் செய்வதற்காக நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | பிரதி ஆயுர்வேத ஆணையாளர் பதவி இலங்கை நிருவாக சேவையின் I தர பதவியொன்றான காணப்பட்ட போதிலும் இலங்கையின் நிருவாக சேவை I தர உத்தியோகத்தர் காணப்படாமையால் III ஆம் தர உத்தியோகத்தர் வெற்றிடம் நிரப்பப்படும் திகதி வரை முழு நேர அடிப்படையில் கடமைகளை நிறைவேற்றுவதற்காக நியமனம் செய்வதற்காக பகிரங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது என. சுதேச வைத்தியமுறை தொடர்பான தேசிய நிறுவனத்தின் பணிப்பாளர் பதவி இலங்கை நிருவாக சேவையின் I தர பதியொன்றாக காணப்படுவதுடன் I தர உத்தியோகத்தர் காணப்படாமையால் இ.நி.சே.- II தர உத்தியோகத்தர் முழு நேர | தகைமை உடைய உத்தியோகத்தர்களைக் கொண்டு குறிப்பிட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அடிப்படையில் கடமை நிறைவேற்றுவதற்காக நியமனம் செய்யப்பட்டுள்ளது என. ஆயுர்வேத வைத்தியசாலைகள் பணிப்பாளர் பொரளை, கம்பஹா, மஞ்சங்தோடுவாய், கோனேஷ்பூரி, அம்பாறை, மதவாச்சி மற்றும் ஹம்பாந்தோட்டை ஆகிய பதவிகள் இலங்கை ஆயுர்வேத வைத்திய நிருவாக I தர பதவியாகக் காணப்படுவதுடன் II தர பதவியாகிய உதவி ஆணையாளர் (கலைசார்), சுதேச வைத்திய முறை தொடர்பான தேசிய நிறுவகத்தின் உதவிப் பணிப்பாளர் (கல்வி தொழிநுட்ப) மற்றும் பிரதிப் பணிப்பாளர் நாவின்ன வைத்தியசாலை ஆகிய பதவிகளில் கடமைகளை அணவல் செய்வதற்காக வைத்திய உத்தியோகத்தர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளது என மற்றும் இலங்கை ஆயுர்வேத வைத்திய சேவையின் நிருவாக II பதவிக்காக விண்ணப்பங்கள் அழைக்கப்பட்டு நேர்முகப் பரீட்சை நடாத்தப்படுகின்றது என. | |
| (உ) | தலைமை அலுவலகத்திற்கு சொந்தமான விடுதியொன்று மற்றும் சுற்றுலா விடுதியொன்று காணப்படாத போதிலும் விடுதி மற்றும் சுற்றுலா விடுதி பொறுப்பாளர் மற்றும் சமையலாளர் ஆகிய 02 பதவிகளுக்காக அங்கீகாரம் பெற்று அந்த பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | ஆயுர்வேத திணைக்களத்தில் அங்கீகரிக்கப்பட்ட விடுதிப் பொறுப்பாளர் பதவியில் கடமையாற்றும் ஊழியர் சேவையின் தேவைப்பாட்டின் கீழ் பத்கொட மூலிகைத் தோட்டத்திற்கு இணைக்கப்பட்டுள்ளது என. எனினும் அந்த மூலிகைத் தோட்டத்திற்காக விடுதிப் பொறுப்பாளர் பதவியொன்று அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை எனவும் அங்கீகரிக்கப்பட்ட சுற்றுலா விடுதிப் பொறுப்பாளர் பதவியில் கடமையாற்றும் ஊழியர் சேவையின் தேவைப்பாட்டின் காரணமாக கதிர்காமம் சுற்றுலா விடுதிக்கு | திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஆளணி மீண்டும் மீளாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

இணைக்கப்பட்டுள்ளதுடன் அந்த சுற்றுலா வீட்டிற்கு சுற்றுலா விடுதி பொறுப்பாளர் பதவி அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை என.